சுவாமி விவேகானந்தர்

கல்வி

ஆண்மை தரும்

- கல்வியே -

நமக்குத் தேவை

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

வைசிய இளைஞர் தமிழ் சங்கம்
Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

24.7.83

PRESENTED BY
V. ... M.
KASIV... CHETTIAR
...

கல்வி

ஸ்வாமி விவேகானந்தர்
அருளியது

தி. சு. அவினாசிலிங்கம்
அவர்களால் ஆங்கிலத்தில் தொகுக்கப்பட்டு
மொழிபெயர்க்கப்பட்டது

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்
கோயமுத்தூர் ஜில்லா.

முதற் பதிப்பு : டிசம்பர் 1941

உரிமை பதிப்புற்றது

வெளியிடுவோர் :

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்
கோயமுத்தூர் ஜில்லா

சக்தி பிரஸ் லிமிடெட்,
சென்னை

முன்னுரை

தமிழ்ப் பணி செய்ய வித்யாலயம் முன்வந் திருப்பதை நண்பர்கள் அறிவார்கள். 'திருக் கேதார யாத்திரை' தமிழ் அன்னையின் திருப்பாதங்களுக்கு எங்கள் முதல் மலராகும். இஃது இரண்டாவது.

திருக்கேதார யாத்திரையைத் தமிழ்மக்கள் மிக அன்புடன் வரவேற்றிருக்கிறார்கள். இதையும் அங் ஙனமே ஏற்பார்கள் என்று நம்புகிறோம்.

இதன் ஆங்கிலப் பதிப்புக்கு மஹாத்மா காந்தி அடிகள் கொடுத்த முகவுரைக் கடிதம் இதிலும் மொழி பெயர்த்து வெளியிடப் பட்டிருக்கிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்
7-12-41

தி. சு. அவிநாசிலிங்கம்.
நா. ம. ரா. சுப்பராமன்.

سیوا گرام
براہ واردھا (سی-پی)

सेवाग्राम
वर्धा होकर (मध्य प्रांत)

SEVAGRAM
Via WARDHA (C. P.)

Dear Avinashi,

Surely Swami Vivekananda's writings need no introduction from anybody. They make their own irresistible appeal.

Yours
Bapu

22-7-'41

சேவாகிராமம்
வர்தா (மார்க்கம்)

அன்பார்ந்த அவினாசி,

விவேகானந்த சுவாமிகள் எழுதியிருக்கும் நூல்களுக்கு எவருடைய முகவுரையும் தேவையில்லை. அவை தடுக்கமுடியாத உணர்ச்சியை நம் மனதில் உண்டாக்குகின்றன.

உனதன்புள்ள,
பாபு
(மகாத்மா காந்தி)

22-7-'41

முகவுரை

புதிய இந்தியாவுக்கு அடிகோலியவர்களுள் ஸ்ரீமத் விவேகாநந்த சுவாமிகள் ஒருவர். அவர் வீர கர்ச்சனைகள் உறங்கிக் கொண்டிருக்கும் நம் நாட்டு மக்களைத் தட்டி யெழுப்பியது. ஆண்மையும் வீர மும் செறிந்த அவருடைய சொற்களைப் படிக்குந் தோறும் நமது உள்ளத்தில் உயரிய உணர்ச்சிகள் உண்டாகின்றன. இத்தகைய மகான் கல்வியைப் பற்றி ஆங்காங்குக் கூறிய உரைகளை ஒன்று சேர்த்து வெளியிடுதல் கல்வியுலகில் பணி ஆற்றும் ஊழியர் களுக்கு உதவுவதாயிருக்கும்.

அப்பணியை மேற் கொள்ளவேண்டு மென்று கொஞ்ச காலமாக மனதில் எண்ண மிருந்தது. இப் பொழுது நடந்துவரும் சத்யாக்ரகத்தின் காரண மாகச் சிறை சென்றது அதற்கு அவகாச மளித்தது. திருச்சி சிறையிலேயே இப்பணியின் பெரும்பாகம் ஆற்றப்பட்டது. இது முதலில் ஆங்கிலத்தில் தொகுக் கப் பெற்றுச் சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தாரால் பிரசுரம் செய்யப்பட்டது. பல நண்பர்களும் பெரி யோர்களும் இதை மனமுவந்து வரவேற்றனர்; இதைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவது தமிழ்ச்சகோதரர்களுக்கு உதவியாயிருக்குமென்று அபிப்பிராயப் பட்டனர். அதன் காரணமாக இந் நூல் வெளிவருகிறது. சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தாரால் தமிழில் வெளியிடப்பட்டிருக்கும் 'எனது தாய்நாடு,' 'எனது போர் முறை,' 'கரும

யோகம், 'ராஜயோகம்' ஆகிய நூல்களிலிருந்து சில பாகங்கள் இந்நூலில் கையாளப் பட்டிருக்கின்றன. இதற்கு அவர்கள் கொடுத்த அநுமதிக்கு எங்கள் நன்றி உரியது.

விரைவில் வெளியிடப் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் அவசரமாய் வெளிவருகிறது. பிழைகளிருப்பின் பொறுத்தருள்க.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்
7-12-41

தி. சு. அவிநாசிலிங்கம்.

பொருளடக்கம்

		பக்கம்
1.	ஆண்மை தரும் கல்வி	1
2.	கல்வியின் தத்துவம்	9
3.	கல்வி கற்கும் முறை	19
4.	ஆசிரியரும் மாணாக்கரும்	29
5.	கல்வியும் ஒழுக்கமும்	36
6.	மதக் கல்வி	46
7.	பெண் கல்வி	65
8.	அனைவருக்கும் கல்வி	73

அர்ப்பணம்

கல்வித்துறையில்
ஈடுபட்டிருக்கும்
சகோதரர்களுக்கு

1. ஆண்மை தரும் கல்வி

கல்வியின் முதன்மை

ஐரோப்பாவில் பல நகரங்களுக்கு நான் சென்றிருக்கிறேன். அங்கு ஏழை மக்களும் எவ்வளவு நாகரிகத்துடனும் சௌகரியத்துடனும் வாழ்கிறார்கள் என்பதைக் கவனித்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் நம் நாட்டு ஏழைமக்களின் நினைவு என் மனதில் வர, கண்ணீர் சிந்தி அழுதிருக்கிறேன். இந்த வித்தியாசத்திற்குக் காரணம்தான் என்ன? 'கல்வி' என்பதுதான் எனக்குக் கிடைத்த விடை. கல்வி, தன்னம்பிக்கை—இவற்றின் மூலமே, நம்முள் மறைந்திருக்கும் தெய்விக சக்தியை நாம் வெளிப்படுத்த முடியும்.

அயர்லாந்திலிருந்து அமெரிக்காவுக்குக் குடியேறவரும் மனிதர்களை நான் நியூயார்க் நகரத்தில் கவனித்திருக்கிறேன். அவர்கள் வரும்போது மனம் தளர்ந்து, வாழ்க்கையில் அடிபட்டுச் சலித்துப்போன தோற்றத்துடன்,

யாதொரு விதமான நல்ல உடையுமின்றி, கையில் காசுமின்றி, மனதில் உற்சாகமும் இன்றி வருவார்கள். கையில் ஒரு தடி, அதன் ஓரத்தில் சில கந்தைத் துணிகள்—இவையே அவர்களிடமிருந்த சொத்துக்கள். அஞ்சிய நடையும் வெருண்ட பார்வையும் அவர்களிடம் தென்படும். ஆனால் ஆறு மாதங்களில் இக் கோலம் முற்றிலும் வேறுபடுகிறது: நிமிர்ந்து நடக்கிறார்கள்; உடைமாறி யிருக்கிறது; அவர்கள் கண்களிலும் நடையிலும் முன்னிருந்த பயமும் மருட்சியும் இல்லை. இதற்குக் காரணம் என்ன? அயர்லாந்தில் அவர்கள் கேவலமாக நினைக்கப் பட்டு, கேவலமாக நடத்தப் பட்டு வந்தார்கள். இயற்கையே அவர்களில் ஒவ்வொருவனையும் பார்த்து 'அப்பா, உனக்கு நல்வாழ்க்கை கிடையாது. நீ அடிமையாகப் பிறந்து அடிமையாகவே உன் வாழ்க்கையைக் கழித்து, அடிமையாகவே சாக வேண்டியது தான்' என்று உரைத்த மாதிரி யிருந்தது. பிறவியிலிருந்தே இது போன்ற வார்த்தைகளைக் கேட்டதால் அவன் அவற்றை நம்பி, தான் மிகவும் தாழ்ந்தவன் என்ற உணர்ச்சியால் மயங்கிக் கிடந்தான். ஆனால், அமெரிக்காவில் அவன் கால் அடி எடுத்து வைத்ததும், வேறு சப்தங்கள் அவன்

காதில் விழுந்தன : 'அப்பா, எங்களைப்போல் நீயும் ஒரு மனிதன், உலகில் உயர்ந்த காரியங்கள் அனைத்தையும் சாதித்தவர்கள் மனிதர்கள். அவர்கள் உன்னையும் என்னையும் போன்றவர்களே. ஆண்மை மாத்திரம் இருந்தால் நம்மைப் போன்ற மனிதர்கள் எதையும் செய்து முடிக்க முடியும். எனவே தைரியத்தை மேற்கொள்!' அவன் இவ்வார்த்தைகளைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தான். அவ்வார்த்தைகள் உண்மை என்பதை உணர்ந்தான். இயற்கையே அவன்முன் நின்று 'எழுந்திரு, விழித்திரு, கருதிய கருமம் கைகூடும்வரை உழைத்திடு' என்று கூறுவது போலிருந்தது.

அயர்லாந்திற் போலவே நம் நாட்டுச் சிறுவர்களும் *எதிர்மறைக் கல்வி பெறுகிறார்கள்.

எதிர்மறைக் கல்வி கொடிது

இக்கல்வி முறையில் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. ஆனால், இதன் கெடுதல்கள் அதன் நல்ல அம்சங்கள் அனைத்தையும் மறைக்கும்படி அவ்வளவு அதிகமாக விருக்கின்றன. முதலாவதாக, அது நம் மக்களுக்கு மனிதத்தன்மை யளிக்கக்கூடிய கல்வியாக இல்லை; அது முற்றிலும் எதிர்மறைத் தன்மை

* மக்கள் மனதில் தன்னம்பிக்கையும் சிரத்தையும் ஊட்டாத கல்வி எதிர்மறைக் கல்வி எனப்படும்.

யதாயிருக்கிறது. எதிர்மறை உணர்ச்சியை ஊட்டும் கல்வி அல்லது பயிற்சி சாவினும் கொடியது.

நாம் எந்தவிதமான சக்தியும் வலிமையும் அற்றவர்கள் என்று அதன் மூலம் போதிக்கப் பட்டிருக்கிறோம். உலகில் உயர்ந்த பெரி யோர்கள் நம் நாட்டில் தோன்றி யிருக்கிறார் கள் என்பதே நமக்குச் சாதாரணமாக உணர்த்தப்படுவதில்லை. † உடன்பாட்டு முறை யில் நமக்கு எதுவும் கற்பிக்கப்படுவது கிடை யாது. நம் கைகளையும் கால்களையும் சரியாகப் பயன் படுத்தக்கூட நாம் கற்றுக்கொள்ள வில்லை. இதன் காரணமாகச் சென்ற ஐம்பது வருஷங்களில் இக்கல்வியின் மூலம் அறிவு வளர்ச்சியில் தேர்ந்த ஒருவர்கூட உண்டாக் கப்பட வில்லை. தற்காலத்தில் நம் நாட்டில் தோன்றிய அறிவாளிகள் அனைவரும் வெளி நாடுகளில் கல்வி பயின்றவர்களாகவோ, நம் நாட்டில் இன்னும் சிற்சில இடங்களில் திகழும் பழைய கலாசாலைகளில் மறுபடியும் பயின்று தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டவர்க ளாகவோ இருக்கிறார்கள்.

கல்வியென்பது ஒருவனுடைய மூளையில்

---

† நம் மனதில் தன்னம்பிக்கையும் சிரத்தையும் வளர்க் கக்கூடிய முறை உடன்பாட்டு முறையென்பது.

பல விஷயங்களைத் திணிப்பதன்று. அப்படித் திணிக்கப்படும் விஷயங்கள் வாழ்நாள் முழுதும் செரியாமல் உபத்திரவம் செய்துகொண்டிருக்கும்; அதனால் என்ன பயன்? கற்கும் விஷயங்கள் நன்றாக ஜீரணமாகிப் பயன்பட வேண்டும். அவை உயிர் ஊட்டுவனவாய், ஊக்கம் அளிப்பனவாய், மனிதத் தன்மை தருவனவாய், ஒழுக்கம் அமைப்பனவாய் இருக்கவேண்டும். நீங்கள் ஐந்தே ஐந்து உயர்ந்த கருத்துக்களை நன்றாகக் கிரகித்து, அவற்றை உங்கள் வாழ்க்கையிலும் நடத்தையிலும் ஊன்றி நிற்கும்படி செய்வீர்களானால், ஒரு பெரிய புத்தகசாலை முழுவதையும் மனப்பாடம் செய்தவனைவிடப் பெரிய கல்விமான்களாவீர்கள். வெறும் விஷயங்களைச் சேகரிப்பதுதான் கல்வி என்றால் புத்தகசாலைகளன்றோ பெரிய மகான்களாயிருக்கும்! அகராதிகளன்றோ ரிஷிகளாகிவிடும்!

கல்வி வெறும் விஷயங்களைத் திணிப்பதன்று.

அன்னிய பாஷையிலுள்ள மற்ற மனிதர்களுடைய எண்ணங்கள் சிலவற்றை மனப்பாடம் செய்வதை நீங்கள் கல்வியெனக் கொண்டிருக்கிறீர்கள். பல விஷயங்கள் மூளையில் திணிக்கப்பட்டு ஒரு சர்வ கலாசாலைப் பட்டம் பெற்றுவிட்டால், உங்களைக் கல்விமான்கள் என்று

நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இது உண்மையில் கல்வியாகுமா? உங்கள் கல்வியின் நோக்கமென்ன? ஒரு குமாஸ்தா ஆவது, அல்லது வக்கீல் ஆவது, அல்லது மீறினல், ஒரு மாஜிஸ்ட்ரேட் ஆவது—இவைதானு உங்கள் லட்சியம்? இவை உங்களுக்கும் உங்கள் நாட்டிற்கும் என்ன நன்மை செய்யும்? கண் விழித்துப் பாருங்கள்! அளவற்ற உணவுக்கும் வளத்திற்கும் பெயர்பெற்ற இப்பாரத நாட்டில், இப்பொழுது உணவின்றித் தவிப்பவர்கள் எவ்வளவு பேர்கள் என்பதைக் கவனித்துப் பாருங்கள்! உங்கள் கல்வி இக்குறையை நீக்குமா? சாதாரண மக்கள் தங்கள் வாழ்க்கையைத் தைரியமாக நடத்துவதற்கு உதவக்கூடிய பயிற்சியைக் கொடாத ஒரு கல்வியும் கல்வியாகுமா? மக்கள் மனதில் புதைந்துள்ள மனோவலிமையையும், தரும சிந்தையையும், ஆண்மையையும் வெளிப்படுத்தாத ஒரு கல்வி முறையைக் கல்வியெனச் சொல்லல் தகுமா?

நாம் வேண்டுவது

ஒழுக்கம் அளிப்பது, மனோவலிமை தருவது, புத்தியை விசாலிக்கச் செய்வது, ஒருவனைத் தன் வலிமை கொண்டு தன்னம்பிக்கையுடனிருக்கச்செய்வது ஆகிய இவற்றையளிக்கும் கல்வியே நமக்கு வேண்

டும். அன்னிய ஆதிக்கமின்றி நம் சொந்த ஞானத்துறைகள் எல்லாவற்றையும் நாம் ஆராய்ச்சி செய்தல் அவசியம். அத்துடன் ஆங்கில பாஷையையும், மேனாட்டு விஞ்ஞான சாஸ்திரங்களையும் நாம் கற்க வேண்டும். இவற்றுடன் தொழிற் கல்வியும், தொழில் வளர்ச்சிக்குள்ள சகல அறிவும் நமக்குத் தேவை. இவற்றின் மூலம், படித்தவர்கள் உத்தி யோகம் தேடி அலைவதற்குப் பதிலாக, தங்க ளுக்கு வேண்டிய அளவு சம்பாதித்துக் கொள் ளவும், கஷ்ட காலத்திற்கெனச் சிறிது பொருள் சேகரித்து வைக்கவும் சக்தி பெறு வார்கள்.

ஆண்மை தரும் கல்வி

ஆண்மையளிப்பதே கல்வியின் லக்ஷியமா யிருக்கவேண்டும். எல்லாப் பயிற்சிகளின் நோக்கமும் அஃதே. மனித னுடைய மனோ சக்தியைத் தன் வயப்படுத்தி, பயன் படுத் தத்தக்க துறையில் செலுத்த உதவுவதே கல்வி யெனப்படும். இரும்பு போன்ற தசைகளும், எஃகுப்போன்ற நரம்புகளும், எதுவும் தடுக்க முடியாத அளவற்ற சக்தியும் வாய்ந்தவர்களே நம் நாட்டிற்கு இப்பொழுது தேவை. அவர்கள் சக்தி எதற்கும் அஞ்சாததாய், அண்ட சராசரங் களின் அந்தரங்க இரகசியங்களையும் ஊடுருவி

அறியவல்லதாய், அறிந்தபின் அவற்றின் நோக்கத்தை எவ்வகையிலும் பூர்த்தி செய்யும் ஆற்றல் உள்ளதாய், அவசியமானால் ஆழக் கடலின் அடியிலும் செல்லவல்லதாய், மரணம் ஏற்படினும் அஞ்சாததா யிருக்கவேண்டும். அத்தகைய ஆண்மை தரக்கூடிய மதமே நமக்கு அவசியம்; ஆண்மை தரக்கூடிய கொள்கைகளே நமக்கு வேண்டும்; ஆண்மை தரக்கூடிய கல்வியே நமக்குத் தேவை.

2. கல்வியின் தத்துவம்

மனிதனுக்குள் புதைந்திருக்கும் பூரணத்தை வெளிப்படுத்துவதே கல்வி யெனப்படும். அறிவு மனிதனிடத்து இயல்பாக அமைந்திருப்பது. அது புறத்தே யிருந்து வருவதொன்றன்று; அது அகத்தே அமைந்திருப்பது. ஒரு மனிதன் 'அறிகிருன்' என்று சொல்லுகிறேம். அதை மனே தத்துவ சாஸ்திரத்திற் கேற்ற மொழியில் சொல்லின், 'அவன் கண்டுகொள்கிருன் அல்லது அறியாமைத் திரையை நீக்குகிருன்' என்று சொல்லுதல் வேண்டும். ஆராய்ந்து பார்க்குமிடத்து, எல்லையற்ற அறிவுக் களஞ்சியமாகிய ஆத்மாவை மூடியிருக்கும் அறியாமைத் திரையை நீக்குதலே 'கற்றல்' என்பதன் பொருளாகும். தத்துவ சாஸ்திரியாகிய **நியூட்டன்** உலகக் கவர்ச்சி விதியைக்* கண்டுபிடித்தார் என்கிறேம். அது அவர் வருவாரென்று எங்காவது

மனிதன் உள்ளத்தில் புதைந்திருப்பது.

---

* Law of gravitation

மூலையில் காத்துக்கொண்டிருந்ததா? இல்லை. அது அவர் உள்ளத்திலேயே யிருந்தது. காலம் வரவும் அவர் அதைக் கண்டு வெளியாக்கினார். உலகு இதுகாறும் பெற்ற அறிவு முழுதும் மனத்திலிருந்து வந்தது. சராசரத்திலுள்ள அறிவு அனைத்தும் பொதிந்த எல்லையற்ற நூற் களஞ்சியம் நம் உள்ளத்தே யிருக்கிறது. ஆதலால் நம்மால் கற்கப்படும் பொருள் நமது உள்ளமே. புறத்தேயுள்ள பிரபஞ்சம் நாம் நமது உள்ளத்தை ஆராய ஒரு வெறும் தூண்டு கோல். நம் உள்ளத்தை நாம் கற்றற்கு அவசியமான குறிப்பையும், சந்தர்ப்பத்தையும் கொடுக்கும் கருவியே அது. பழம் விழுந்த குறிப்பினைக் கண்ட நியூட்டன், அதன் காரணத்தை ஆராயத் தமது உள்ளத்தை நோக்கினார். முன்பு கண்டுபிடித்த முடிவுகளோடு ஒரு புது முடிவு புலப்பட்டது. அங்ஙனம் அவர் கண்ட முடிவினை நாம் உலகுக் கவர்ச்சி விதியெனக் கொள்ளுகிறோம். அவ்விதி பழத்திலோ அல்லது பூமியின் நடுவிலோ இருக்கவில்லை.

கற்றல் என்றால் என்ன?

ஆகவே, ஞானம் அனைத்தும் நம் உள்ளத்தே தானிருக்கின்றன. இவை சாதாரணமாக மறைந்து கிடக்கின்றன. இவற்றை மூடி யிருக்கும் திரையை அகற்றுதலே கல்வி

கற்றலாகும். இவ்வாறு திரையைப் படிப்படியாக அகற்றுவது அறிவின் வளர்ச்சி ஆகிறது. எவனொருவனுடைய உள்ளத்தினின்றும் இத்திரை பெரிதும் அகன்று விட்டதோ அவன் பேரறிவாளன் ஆகிருன். இங்ஙனம் அகலப் பெருதவன் பேதையா யிருக்கிருன். முற்றும் அகலப் பெற்றவன் முற்றும் உணர்ந்த ஞானியாகிருன். கல்லினுள்ளே நெருப்பு இருப்பது போல உள்ளத்தினுள் அறிவு அமைந்திருக்கிறது. கல்லை ஒன்ருேடொன்று மோதும்போது தீ வெளியாகிறது. புறத்தே தோன்றும் குறிப்பின்மூலம் அறிவு வெளியாகிறது. சகல அறிவும் ஆற்றலும் நம் உள்ளத்திலேயே யிருக்கின்றன. எல்லா விதமான சக்திகள், இயற்கை ரகசியங்கள், ஆற்றல்கள் எனப் பலவாருக நாம் கூறும் அனைத்தும் மனத்துள்ளே யிருக்கின்றன. மனித ஆன்மாவே சகல ஞானத்திற்கும் பிறப்பிடமாக யிருக்கிறது. அநந்த காலமாய்த் தன் மனதில் புதைந்திருக்கும் ஞானத்தை வெளிப்படுத்துவதே கல்வியாகும்.

உண்மையில் எவரும் மற்றவரிடம் கற்பதில்லை. ஒவ்வொருவரும் தமக்குத் தாமே தான் கற்றுக்கொள்ள வேண்டும். புறத்தேயுள்ள ஆசான் தூண்டுகிருன். அதனல்,

அகத்தேயுள்ள ஆசான் விழித்தெழுந்து அறிந்துகொள்ள நமக்கு உதவி செய்கிறான். நம்முடைய அனுபவத்தினாலும் எண்ணங்களினாலுமே எல்லாம் தெளிவாகின்றன. பல ஏக்கர்கள் கொண்ட நிலத்தைக் கவர்ந்து, பரந்து வானளாவி வளர்ந்திருக்கும் ஆலமரம், அதன் விதையில் அடங்கி யிருந்தது. அதன் விதை கடுகில் கால் பங்கிருக்கலாம். இம் மரத்தில் காணும் சக்தி யனைத்தும் அதில் அடங்கியிருந்தது. அதேபோல் இப்பொழுது காணப்படும் அபார மூளைகளும், ஆதியில் அணுப்பிரமாணமாயிருந்த விதையில் புதைந்திருந்தன. இது ஒரு விந்தையாகத் தோன்றும்; ஆனால் உண்மை! நாம் ஒவ்வொருவரும் அணுவுக் கணுவான ஜீவ அணுவிலிருந்து தான் தோன்றியிருக்கிறோம். நம் சக்திகளனைத்தும் அவ்வணுக்குள் அடங்கியிருந்தன. நம் சக்திகளனைத்தும் உணவிலிருந்து வந்தனவெனச் சிலர் நினைக்கலாம். ஆனால், அப்படிச் சொல்லமுடியாது. ஏனெனில், மலையத்தனை உணவைக் குவித்தாலும் இச்சக்தியை உண்டாக்க முடியுமா? அளவற்ற சக்தி மனித ஆத்மாவில் அடங்கி யிருக்கிறது. மனிதன் அதை உணர்ந்திருக்கலாம் அல்லது உணராம

குழந்தை தானாகவே கற்கிறது.

லிருக்கலாம்; எனினும் எல்லையற்ற ஆற்றல் ஆத்மாவில் அடங்கி நிற்கிறது என்பது உண்மை. இதைச் சரியாக உணர்ந்த மாத்திரத்தில், மனிதன் இச்சக்தியை வெளிப்படுத்த முடியும்.

இத் தெய்வச் சுடர் பலர் மனதில் மறைந்திருக்கிறது. அது ஒரு இருப்புப் பாத்திரத்திற்குள் வைத்த விளக்கை ஒக்கும். இரும்பின்மூலம் விளக்கின் ஒளி பிரகாசிக்க முடியாது. ஆனால், தூய்மையாலும் சுயநலமின்மையாலும் பாத்திரத்தின் தன்மையை மாற்றி, கடைசியில் அதைக் கண்ணாடி மாதிரி ஒளி பிரகாசிக்கச் செய்யமுடியும். ஸ்ரீ ராம கிருஷ்ண தேவரைப் போன்ற பெரியோர்கள், இவ்விதம் இரும்புப் பாத்திரம் கண்ணாடிப் பாத்திரமாக மாறுவதுபோல், தூய நிலையை அடைந்தவர்கள். அவர்கள்மூலம் அவர்களுக் குள்ளிருக்கும் தெய்விக ஒளி பிரகாசித்துக் கொண்டிருந்தது.

குழந்தை வளர உதவி செய்க !

ஒரு செடியை அதன் இயற்கையை மீறி வளரச் செய்ய முடியாது ; அதைப் போல்வதே குழந்தைக்குக் கல்வி புகட்டுதலும். செடி தன் இயற்கைப் படிதானே வளரும் ; அங்ஙனமே குழந்தையும் தன் இயற்கையை ஒட்டியே சுயமாகக் கற்றுக் கொள்ளுகிறது.

ஆனல், நாம் ஒன்று செய்ய முடியும். குழந்தை தன் சுபாவப்படி வளருவதற்கு உதவி செய்ய முடியும். அதன் வளர்ச்சியை நாம் துரிதப் படுத்த முடியாது. ஆனல், அதன் வளர்ச்சிக்கு இடையூருக இருப்பவற்றை நாம் நீக்கலாம். அதற்கு மேல் அது பெறும் அனுபவத்தி லிருந்து தான் அறிவு வளர்ச்சி யுண்டாகும். ஒரு செடியின் வளர்ச்சிக்கு உதவியாக யிருக் கும் பொருட்டு, பூமியைக் கிளறி விடலாம், சுற்றிலும் வேலியிட்டு இதர பிராணிகள் அதை அழிக்காமல் காப்பாற்றலாம்; அது வளரு வதற்குத் தேவையான எரு, தண்ணீர், காற்று முதலியவற்றை அதற்குக் கொடுக்கலாம். அத்துடன் நம் வேலை நின்று விடுகிறது. அதற்கு வேண்டிய அனைத்தும் அது தானே உட்கொண்டு தானே தான் ஜீரணம் செய்ய வேண்டும்; அதுபோல் தான் ஆசிரியனுடைய உதவியும். ஆசிரியன் தான் கற்பிப்பதாக எண்ணுவதனுலேயே எல்லாவற்றையும் கெடுத்து விடுகிருன். சகல ஞானமும் மனித னுக்குள்ளேயே யிருக்கிறது. அதைத் தூண்டி எழுப்புதலே தேவை. அதுவே ஆசிரியனின் வேலை. சிறுவர்கள் தங்கள் சொந்த அறிவை உபயோகப்படுத்தவும், தங்கள் கை, கால், கண், செவி ஆகியவற்றைச் சரியாக உபயோகப்

படுத்தவும் தெரிந்து கொள்ளும் அளவிற்கு நாம் அவர்களுக்கு உதவி செய்தால் போதுமானது.

கழுதையை நன்கு புடைத்தால் அது குதிரையாகுமென்று யாரோ சொல்லக் கேட்டு அவ்விதமே ஒருவன் செய்தான் என்று ஒரு கதையுண்டு. இத்தகைய முறையிலேயே நம் பிள்ளைகளுக்கு இப்பொழுது கல்வி யளிக்கப் படுகிறது. இம்முறை தொலையவேண்டும். பிள்ளைகளின் விஷயத்தில் பெற்றோர் அதிகமாகப் பிரவேசித்துச் சிறு விஷயங்களிலும் தங்கள் விருப்பம்போல் செய்யும்படி வற்புறுத்தலின் காரணமாகப் பிள்ளைகள் தாங்கள் சுயமாக நினைக்கும் பழக்கம் போய், சரியான வளர்ச்சி யடையாமற் போய்விடுகின்றனர். ஒவ்வொருவனிடமும் பல உணர்ச்சிகள் இருக்கின்றன. அவை சரியாகத் திருப்தி செய்யப்படவேண்டும். பலாத்கார முறையில் சீர்திருத்தம் செய்ய முயற்சி செய்வதில் சீர்திருத்தத்தின் நோக்கம் குன்றுகிறதே ஒழிய நிறைவேறுவதில்லை. ஒருவனுக்குச் சுயேச்சை யளித்தால் அவன் பலம் பெற்றுச் சிங்கம் போலாக வழியுண்டு. ஆனால், அவனைப் பலாத்காரப்படுத்தி அடக்கிவைத்தால் அவன் தன் குறைகளை மறைத்து நரிபோலாவான்.

பலாத்கார முறை தவறு.

நாம் உடன்பாட்டு முறையில் உயர்ந்த எண்ணங்களையும் இலட்சியங்களையும் கொடுக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் மக்களைப் பலஹீனப் படுத்துகின்றன. சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை எப்பொழுதும் எழுதும்படியும் படிக்கும்படியும் வற்புறுத்திக் கொண்டும், "நீங்கள் உதவாக் கட்டைகள், மடச் சாம்பிராணிகள்" என்று சதா திட்டிக்கொண்டும் இருப்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். அப்பிள்ளைகள் பல சமயங்களில் அப்படியே ஆனமையை நீங்கள் கண்டதில்லையா? அன்புடன் புத்திமதிகள் சொல்லி, அவர்களை உற்சாகப்படுத்தினால் அவர்கள் கண்டிப்பாக அபிவிருத்தியடைவார்கள். உடன்பாட்டு முறையில் அவர்களுக்கு உயர்ந்த கருத்துகள் கொடுத்தால், அவர்கள் சுயேச்சையாகத் தாங்களே தங்கள் காரியங்களை நிர்வாகம் செய்யக்கூடிய சக்தியைப் பெறுவார்கள். மொழியிலாகட்டும் அல்லது இலக்கியத்திலாகட்டும், கவியிலாகட்டும் அல்லது இதர கலைகளிலாகட்டும், நினைவிலாகட்டும் அல்லது செயலிலாகட்டும், மக்கள் செய்யும் குற்றங்களைக் காட்டிக் கடிவதில் பயனில்லை. ஆனால், அவர்கள் எவ்விதம் இன்னும் நன்றாகக் குற்றங்களின்றி அவற்றைச் செய்ய

உடன்பாட்டு முறை

முடியும் என்பதை எடுத்துக் காட்டவேண்டும். சொல்லிக் கொடுக்கப் படுபவர்களின் தன்மையை அனுசரித்துச் சொல்லித் தருதலே கல்வி பயிற்றுவதற்கு ஏற்றமுறை. நம்முடைய முந்திய வாழ்க்கைகள் நமது மனதின் போக்கைத் தீர்மானம் செய்திருக்கின்றன. எனவே, நமக்குக் கொடுக்கப்படும் கல்விப் பயிற்சி நமது மனப்போக்குக்கு ஏற்றதாக யிருக்க வேண்டும். ஒவ்வொருவனையும் அவன் இருக்குமிடத்திலிருந்து முன்னேறும்படி உதவி செய்யவேண்டும். மிகவும் கடையானவர்கள் என்று நாங்கள் நினைத்த பேர்களைக் கூட, ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர் அவர்களுக்கு ஊக்கமளித்து அவர்கள் வாழ்க்கையின் போக்கையே புதிதாக மாற்றி அமைத்த விந்தையை நாங்கள் அறிவோம். அவர் எவருடைய தனிப்பட்ட சுபாவத்தையும் அழிக்கவில்லை. மிகத் தாழ்ந்தவர்களுக்கும் உற்சாகமளிக்கக்கூடிய வார்த்தைகள் சொல்லி அவர்களை முன்னேற்றமடையச் செய்தார்.

சுதந்தரம் வளர்ச்சிக்கு அவசியம்

சுதந்தரமே மனித வளர்ச்சிக்கு முதல் அவசியம். "இந்தக் குழந்தை அல்லது அந்தக் குழந்தைக்கு நான் விமோசனம் அளிப்பேன்" என்று யாராவது சொல்லத் துணிவார்களானால், அது தவறு, முற்றிலும் தவறு

என்று நான் உரைப்பேன். விலகி நில்லுங்கள்! அவரவர்கள் பிரச்னைகளை அவரவர்களே தீர்த்துக் கொள்ளுவார்கள். கடவுளுக்கு மீறின சக்தி யிருக்கிறதென்று நினைக்க உங்களுக்கு அவ்வளவு அகம்பாவமா? ஒவ்வோர் ஆத்மாவும் கடவுளின் சொரூபம் என்பதை நீங்கள் உணர மாட்டீர்களா? எல்லோரையும் கடவுளாகப் பாருங்கள்! சேவை செய்யத்தான் உங்களுக்கு உரிமையுண்டு. உங்களுக்கு அந்தப் பாக்கியம் இருந்தால் கடவுளின் குழந்தைகளுக்குச் சேவை செய்யுங்கள். ஆண்டவனின் குழந்தைகளுக்கு உதவி செய்ய முடியுமானால், நீங்கள் அவன் அருள் பெற்றவராவீர்கள். மற்றவர்களுக்கு இச் சந்தர்ப்பம் கிடையாமலிருக்க, நீங்கள் இதைப் பெற்றது ஆண்டவனின் கிருபை உங்கள் மேலிருப்பதற்கு அறிகுறி என்று உணருங்கள்! இச் சேவையை இறைவனின் ஆராதனையாகப் பாவித்துச் செய்வீர்களாக!

3. கல்வி கற்கும் முறை

அறிவு வளர்ச்சிக்கு ஒரே ஒரு முறைதான் உண்டு. அதுதான் மனதை ஒருமுகப் படுத்தல் என்பது. கல்வியின் அடிப்படையான இலட்சியமே மனதை ஒருமுகப் படுத்துவது

மன ஒருமை

தான். சாதாரண மனிதனிலிருந்து சகல சித்திகளையும் பெற்ற யோகி வரை, எல்லோரும் தங்கள் அறிவு வளர்ச்சிக்கு அம்முறையைத்தான் பின்பற்றி யாகவேண்டும். ரசாயன சாலையில் வேலை செய்யும் ரசாயன சாஸ்திரி தன் மனோ சக்தி முழுவதையும் ஒருமுகப் படுத்திப் பிரகிருதி வஸ்துக்களின்மேல் செலுத்துகிறான்; அப்பொழுது இப்பிரகிருதி வஸ்துக்களின் உண்மைத் தன்மை புலனாகி அறிவு உண்டாகிறது. வான சாஸ்திரி தன் மனோசக்தியை ஒருமுகப் படுத்தித் தூரதிருஷ்டிக் கண்ணாடியின் மூலம் தான் ஆராய விரும்பும் கிரகங்களின்மேல் செலுத்துகிறான். அப்பொழுது

நட்சத்திரங்களும், சூரிய மண்டலங்களும் முன் வந்து அவனுக்குத் தம் இரகசியங்களை வெளிப் படுத்துகின்றன. கல்லூரிகளில் வேலை செய் யும் ஆசிரியர்களும், கல்வி பயிலும் மாணவர் களும், இன்னும் அறிவு வளர்ச்சிக்காகப் பாடுபடும் அனைவரும் இவ்விதம் தங்கள் மனதை ஒருமுகப் படுத்துவதன் மூலமே தங்கள் அறிவை அபிவிருத்தி செய்துகொள்ளு கின்றனர்.

அதன் சக்தி

மனதை ஒருமுகப் படுத்துகிற அளவிற்கு அறிவு வளர்ச்சியும் அதற்கேற்றவாறு அதிக மாகும். செருப்புத் தைப்பவனுங்கூடத் தன் வேலையில் மனதை ஒருமுகப் படுத்தினால் நன்றாகச் செருப்புத் தைக்கமுடியும். சமையல் காரன் தன் மனதை ஒருமுகப் படுத்தினால் நன்றாகச் சமையல் செய்வான். பணம் சம்பா திப்பதிலாகட்டும், கடவுளைத் தொழுவதிலாகட் டும்—எதைச் செய்வதிலாகட்டும் மனஒருமை அதிகமாயிருக்கும்வரை அது நன்றாக நடை பெறும். இயற்கையால் மூடப்பட்டிருக்கும் அறிவுச் சுடரைப் பெறுதற்கு இஃது ஒன்றே சிறந்த நெறியாம்.

சாதாரண மனிதனால் தன் மனோசக்தியில் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு வீண்

செய்யப் படுகிறது. ஆதலால் தான் அவன் அடிக்கடி தவறுகள் செய்கிறான். பண்புடைய மனத்தைப் பெற்றவன் ஒரு தவறும் செய்ய மாட்டான்.

மனிதருக்குள் வித்தியாசத்தின் காரணம்

மனிதனுக்கும் மிருகத்திற்கும் உள்ள முக்கிய வித்தியாசம் மனதை ஒருமுகப் படுத்துவதில்தான். மிருகங்களைப் பழக்குகிறவர்கள் அவற்றிற்குச் சொல்லிக் கொடுப்பதை அவை அடிக்கடி மறந்து விடுவதை அறிவார்கள். எவ்விஷயத்தின் மேலும் அவை அதிக நேரம் மனதை ஒருமுகப் படுத்த முடியாததே அதற்குக் காரணம். இதில்தான் மனிதனுக்கும் மிருகத்திற்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. மனிதனுக்கும் மனிதனுக்கும் இருக்கும் வித்தியாசமும் அவனவனிடத்தில் உள்ள மனதை ஒருமுகப்படுத்தும் சக்தியைப் பொறுத்துத்தான் இருக்கிறது. மிகத் தாழ்ந்த மனிதனை மிக உயர்ந்த மனிதனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்! மனதை ஒருமுகப் படுத்துவதில்தான் அவர்கள் வித்தியாசம் இருக்கும்.

எத் துறையிலும் வெற்றி பெறுவது இதைப் பொறுத்ததாய்த் தான் இருக்கிறது. சங்கீதம், ஓவியம், சிற்பம் முதலிய எல்லாக் கலைகளிலும் உயர்ந்த தேர்ச்சி பெறச் செய்

வது மனஒருமை தான். மனதை ஒருமுகப் படுத்தி நமக்குள்ளேயே செலுத்தினல், நம்முள் ளிருக்கும் நம் புலன்கள் அனைத்தும் நம் வசப் பட்டு நாம் கூறியவாறு செய்யும். கிரேக்கர்கள் தங்கள் ஒருமுகப் படுத்திய மனதை வெளி உலகின்மேல் செலுத்தினர்கள். அதன் காரணமாகச் சிற்பம் இலக்கியம் முதலிய கலைகளில் பூரணத்துவத்தை அடைந்தார்கள். இந்தியர்கள் தங்கள் ஒருமுகப் படுத்திய மனதை நம் வெளிப் புலன்களுக்கு எட்டாத ஆத்மீகத் துறையில் செலுத்தியதன் பயனுக யோக சாதனத்தை அபிவிருத்தி செய்தார்கள். உலகத்தின் இரகசியங்களை மூடிவைத்திருக்கும் கதவுகளைத் திறக்கக்கூடிய சக்தியைப் பெற்ருல் உலகம் அதன் இரகசியங்களை நமக் களிக்கத் தயாராய் இருக்கின்றது. அக் கதவு களைத் திறக்கக்கூடிய வலிமையை மாத்திரம் நாம் பெறவேண்டும். இவ் வலிமையை நமக்கு அளிக்கக் கூடியது மனே ஒருமைதான்.

அதன் பலன்

மனே ஒருமையின் சக்தியே அறிவுக்களஞ் சியத்தின் திறவுகோல். நாம் இருக்கும் இப் போதைய நிலையில் நம்மனது ஒருமுகப் படாது பல நூறு விஷயங்களில் சென்று நம் சக்தி வீணுகிறது. நாம் மனதை ஒருமுகப் படுத்த

முயற்சி செய்ய ஆரம்பித்த உடனே, நாம் விரும்பாத பல எண்ணங்களும் உணர்ச்சிகளும் நம் மனதில் தோன்றி மனதை ஒருமுகப்படுத்த முடியாமல் செய்கின்றன. இவற்றை அடக்கி மனதை நம் வசப்படுத்துவது எங்ஙனம் என்பதே இராஜயோகம் நமக்குக் கற்பிக்கும் விஷயம். தொடர்ச்சியாகத் தியானம் செய்வது மன ஒருமையைத் தரக் கூடிய சிறந்த சாதனமாகும்.

அறிவுக் களஞ்சியத்தின் ஒரே திறவுகோல்

கல்வியின் இலட்சியம் விஷயங்களைப் பற்றிய ஞானத்தைச் சேகரம் செய்வதன்று. மனே ஒருமையே கல்வியின் அடிப்படையான இலட்சியம் என்பது எனது முடிவு. நான் மறுபடியும் கல்வி கற்பதாக இருந்தால் விஷயங்களைப்பற்றிப் படிக்கவே மாட்டேன். மனே ஒருமையையும், மனதை எந்த இடத்திற்கும் எக்கணத்திலும் செலுத்தும் சக்தியையும் அபிவிருத்தி செய்வேன். அதற்குமேல் அவ்வுயர்ந்த சக்தியாகிய ஆயுதத்தைக்கொண்டு நான் விரும்பிய விஷயங்களை எளிதில் அறிந்து கொள்ளமுடியும்.

பன்னிரண்டு வருடங்கள் பிரமசரியத்தைத் தவருது அனுஷ்டித்து வருபவன் அளவற்ற சக்தியைப் பெறுகிருன். பிரமசரியம்

சரியாகக் கையாளப்பட்டால் உயர்ந்த புத்தியை யும் ஆத்மீக சக்தியையும் அது நமக்களிக்கும். நம் விருப்பங்களை யடக்கியாளுவது பெரும் பயனை அளிக்கிறது. காம உணர்ச்சியை அடக்கி அதை மகத்தான ஆத்மீக சக்தி யாக மாற்றிக்கொள்ளுங்கள்! ஆத்மீக சக்தி அதிகமிருக்கும் வரையில் ஒருவன் மாபெரும் காரியங்களைச் சாதிக்க முடியும். நிறைந்த சக்தி இருப்பவர்கள் தாம் கடினமான காரியங்களைச் செய்து முடிக்க இயலும். பிரமசரியத்தைச் சரிவர அனுஷ்டிக்காத காரணத்தினால் தான் நம் நாடு இவ்வளவு சீர்குலைந்திருக்கிறது. பிரம சரியத்தைச் சரிவர அனுஷ்டிப்பதன் மூலம் எதையும் விரைவில் கற்கமுடியும். ஒருதரம் கேட்டதும் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் சக்தியையும் சிறந்த ஞாபக சக்தியையும் அத் தகையவன் பெறுகிறான். பரிசுத்தமான மனது அளவில்லாப் பலமும் மனத்திட்பமும் சக்தியும் பெறுகிறது பூரண பரிசுத்தமின்றி ஆத்மீக பலம் கிடையாது.. பிரமசரியத்தை அனுஷ்டித்தவர்கள் ஜன சமுதாயத்தில் மகத் தான செல்வாக்கைப் பெற்றவர்களாக இருந் திருக்கின்றனர். ஆத்மீகத் துறையில் சிறந்து விளங்கி யிருந்தவர்கள் அனைவரும் பரிசுத்த

பிரமசரியத்தின் அவசியம்

மான வாழ்க்கையை ஏற்றவர்களாகவே இருந்திருக்கின்றனர். இப்பரிசுத்த வாழ்க்கையே அவர்களுக்கு அரிய சக்தியை அளித்திருக்கிறது.

ஒவ்வொரு மாணவனுக்கும், பிரமசரியத்தை அனுசரித்து, பரிசுத்தமான வாழ்க்கையைப் பின்பற்றத் தக்க பயிற்சியை அளிக்க வேண்டும். அதற்குமேல்தான் தன்னம்பிக்கையும் சிரத்தையும் உண்டாகும். பிரமசரியம் என்பது, மனம், வாக்கு, காயம் என்ற மூன்றிலும், எல்லா இடங்களிலும் சந்தர்ப்பங்களிலும் பரிசுத்தமாக இருப்பது. புறத் தூய்மை மாத்திரம் போதாது. பரிசுத்தமில்லா எண்ணங்கள், பரிசுத்தமில்லாச் செய்கைகளைப் போலவே கெட்டது விளைவிக்கக் கூடியவை. பிரமசாரியாக இருக்க விரும்புகிறவன் தான் எண்ணும் எண்ணங்களிலும், பேசும் வார்த்தைகளிலும், செய்யும் காரியங்களிலும் தூய்மையுடையவனாக இருத்தல் வேண்டும்.

சிரத்தையே அடிப்படை

நம் மக்கள் மனதில் மறுபடியும் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும். எதையும் தம்மால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை நம் மக்களுக்குள் பிறப்பித்தாலொழிய நம் சமூகத்துள் இப்பொழுது தோன்றியிருக்

கும் பல பிரச்னைகளைத் தீர்க்க முடியாது. நமக்கு வேண்டியவை சிரத்தையும் தன்னம்பிக்கையுமே. மனிதனுக்கும் மனிதனுக்கும் வித்தியாசத்தை உண்டுபண்ணுவது அவரவர்களுக்கிருக்கும் தன்னம்பிக்கையிலும் சிரத்தையிலும் உள்ள வித்தியாசமே யொழிய வேறு ஒன்றுமன்று. ஒருவனைப் பலவானாக்குவது அவனிடமிருக்கும் தன்னம்பிக்கை. மற்றொருவனைப் பலஹீனன் ஆக்குவது அவனிடம் அத்தன்னம்பிக்கை இல்லாமையே. தன்னைப் பலமற்றவனாக நினைப்பவன் பலமற்றவனாகவே ஆகிறான் என்று எங்கள் குருநாதர் உரைப்பதுண்டு. அது முற்றிலும் உண்மை. அளவற்ற தன்னம்பிக்கை உங்கள் மனதில் புகவேண்டும். மேல்நாட்டு மக்களிடம் காணப்படும் சக்தி அவர்களுக்குத் தங்கள் உடற் பலத்திலுள்ள நம்பிக்கையினின்றும் உண்டானது. நீங்கள் ஆத்மாவில் நம்பிக்கை வைத்தால் இன்னும் பன்மடங்கு சக்திபெற முடியுமன்றோ?

இந்த ஒரு விஷயத்தை நன்கு தெரிந்து கொள்ளும்படி மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். தான் பலமற்றவன் சக்தி யற்றவன் என்று சதா நினைப்பவனிடமிருந்து ஒரு நன்மையும் விளைவதில்லை. ஒருவன்

மனம்போல மாங்கல்யம்

அல்லும் பகலும், தான் துக்கத்தில் ஆழ்ந் திருப்பவன், தாழ்ந்தவன், சக்தி யற்றவன், ஒன்று மில்லாதவன் என்றே நினைப்பானுனல் அவன் சக்தி யற்றவனுகவே ஆகிருன். 'நான் சகல சக்தியும் பெற்றவன் ; எதையும் செய்யக் கூடியவன்' என்று நினைப்பானுனல் அப் படியே ஆவான். நீங்கள் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய பெரிய உண்மை இது. நாம் அனைவரும் சர்வ சக்தி வாய்ந்த மகா சக்தியின் குழந்தைகள். நாம் எல்லையில்லா தெய்விகச் சோதியினின்றும் தோன்றிய பொறிகள். நாம் எப்படிச் சக்தி யற்றவர்களாக முடியும்? "நாம் சகல சக்தி யும் பொருந்தியவர்கள் ; எக்காரியத்தையும் செய்துமுடிக்கச் சித்தமாயிருப்பவர்கள் ; நாம் எக்காரியத்தையும் செய்து முடிக்க முடியும்" என்ற தன்னம்பிக்கை நம் முன்னோர்கள் மனதிலிருந்தது. அவர்கள் தங்கள்பால் கொண்ட தன்னம்பிக்கையே அக் காலத்தில் உலகிற்குச் சிறந்த நாகரிகத்தை உண்டாக்கக் கூடிய சக்தியை அவர்களுக் களித்தது. எந்தத் தினத்தில் மக்கள் தன் னம்பிக்கையை இழந்தார்களோ அதிலிருந்து நம் க்ஷீணதிசையும் ஆரம்பித்திருப்பதைக் காணலாம்.

சிரத்தையையும் தன்னம்பிக்கையையும் மக்களுக்குப் போதிப்பதே என் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டிருக்கிறேன். நான் மறுபடியும் கூறுகிறேன், கேளுங்கள். இத் தன்னம்பிக்கை மக்களுக்குள் இயங்கும் மகத்தான சக்திகளில் ஒன்று. தன்னம்பிக்கையை நீங்கள் அனைவரும் பெறுங்கள்! சமுத்திரத்திலிருந்து ஒரு சிறிய குமிழியும் தோன்றலாம்; ஒரு மலைபோன்ற பெரிய அலையும் தோன்றலாம். ஆனால், இவ்விரண்டிற்கும் பின்னால் அதே எல்லையற்ற அளக்கவொண்ணாத பெரிய சமுத்திரம் இருக்கிறதென்பதை உணருங்கள்! அத்தகைய எல்லையற்ற மகத்தான சக்தி எனக்கும் உங்களுக்கும் அடிப்படையாக இருக்கிறது. அந்தப் பரந்த எல்லையற்ற சக்தி வாய்ந்த தெய்விக சமுத்திரம் அனைவர் பின்னும் இருக்கிறது. ஆதலால், சகோதரர்களே உயிர் கொடுக்கக்கூடிய இந்த உயர்ந்த சீரிய கொள்கையை உங்கள் குழந்தைகளுக்கு, பிறவியிலிருந்தே ஊட்டி வளர்ப்பீர்களாக!

---

4. ஆசிரியரும் மாணாக்கரும்

குருகுல முறை

குருகுல முறையில் கல்வி பயிற்றுவதே உயர்ந்த முறையென்பது எனது அபிப்பிராயம். கல்வி பயிற்றுவதில் ஆசிரியரின் சொந்த வாழ்க்கை மிக முக்கியமானது. சுடர் விட்டெரியும் ஜோதிபோன்ற தூய ஒழுக்கமுடைய ஆசிரியருடன் ஒருவன் தன் குழந்தைப் பிராயத்திலிருந்து வசித்தல் வேண்டும். அவ்வாசிரியர் உயரிய கல்விப் பயிற்சிக்கு உயிருள்ள உயர்ந்ததோர் உதாரணமாக விளங்க வேண்டும். நம் தேசத்தில் கல்வி பயிற்றும் வேலை எப்பொழுதும் தியாகிகள் வசமேயிருந்து வந்திருக்கிறது. இப்பணி மறுபடியும் தியாக புருஷர்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும்.

நம் நாட்டில் பழங்காலத்திலிருந்த கல்வி முறை தற்கால முறையிலிருந்து மிகவும் மாறுபட்டதாக இருந்தது. மாணவர்கள் யாதொரு

சம்பளமும் கொடுக்கவேண்டியிருக்கவில்லை கல்வியறிவு மிகவும் புனிதமானது; எனவே அதை எவரும் விற்கக் கூடாதென்று கருதப் பட்டது. கல்வி யாதொரு விலையுமின்றி இலவசமாக அளிக்கப்பட வேண்டுமென்று அக்காலத்தில் எண்ணினார்கள். ஆசிரியர்கள் யாதொரு கட்டணமுமின்றி மாணாக்கர்களை எடுத்துக்கொண்டார்கள். அது மாத்திரமல்லாமல், பலர் அவர்களுக்கு உணவும் உடையும் அளித்தனர். இவ்வாசிரியர்களின் சம்ரக்ஷணைக்காகப் பலதனவந்தர்கள் மானியங்கள் விட்டனர். இவற்றின் உதவியைக்கொண்டு அவர்கள் தங்கள் மாணாக்கர்களைக் காப்பாற்றினார்கள். பழங்காலத்தில் மாணாக்கனை விரும்புகிறவன், குருவிற்காக விறகு பொறுக்கிக் கொடுத்தல் முதலிய சேவைகளைச் செய்து, குருவை நாடுவான். குருவும் அவனுடைய யோக்யாம்சத்தை யறிந்து அவனுக்கு வேதங்களை உபதேசிப்பார். மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றிலும் அவன் அடக்கத்துடன் இருக்கவேண்டும் என்ற விரதத்தின் அறிகுறியாக, **முன்ஜா** என்ற ஒருவிதப் புல்லின் மூன்று திரிகளை அவன் இடுப்பில் அவர் கட்டுவார்.

பழங்காலக் கல்விமுறை

ஆசிரியர்களும் மாணுக்கர்களும் சில குண திசயங்களை உடையவர்களாக இருத்தல் அவசியம். அறிவு வளர்ச்சி

மாணவன் இலக்கணம்

யில் உண்மையான அவாவும், விடா முயற்சியும், தூய்மை யுமே மாணுக்கனுக்குரிய இலக்கணங்களில் முக்கியமானவை. மனே வாக்குக் காயத்தில் பூரண தூய்மை இன்றியமையாததாகும். கருதியபொருள் கைகூடும் என்ற ஆன்ருேர் மொழியொன்றுண்டு. அதற்கேற்ப நமக்குக் கல்வி பெறுவதில் நிறைந்த ஆர்வம் இருக்க வேண்டும். நாம் முழு மனதுடன் விரும்பிஞலொழிய ஒரு வஸ்து நமக்குக் கிடைக்காது. அதற்காக இடைவிடாத முயற்சி செய்ய வேண்டும். நம் மனதிலிருக்கும் தாழ்ந்த குணங்களையொழிக்க ஓயாத போர் செய்யவேண்டும். தாழ்ந்த தன்மையை அகற்றி, உயர்ந்த தன்மை வெற்றி பெறும்வரை இந்த யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டும். இவ்வித ஊக்கத்துடன் முயற்சி செய்யும் மாணுக்கன் நிச்சயமாக வெற்றிபெறுவான் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியனே, மறைகளின் மெய்ப்பொருளை உணர்ந்தவஞ யிருத்தல் அவசியம். எல்லோரும் தம் தம் மதத்திலுள்ள வேத நூல்களைப் படிக்கிருர்கள். ஆஞல், இவர்கள் பெரும்

பாலும் அந்நூல்களிலுள்ள இலக்கண இலக்கிய நயங்களையே பாராட்டுகிறார்கள். சொற்சுவை கற்பித்துக்கொண்டு அதனை விஸ்தாரப் படுத்துவதிலேயே திருப்தி பெறுகிறவர்களுக்குப்பொருட்சுவை எவ்வாறு பரிமளிக்கும்?

ஆசிரியரின் இலக்கணம்

வேதத்தின் மெய்ப்பொருளை அறிவதுதான் உண்மை ஆசிரியனின் இலக்கணம்.

ஆசிரியனின் இரண்டாவது குணம், அவன் மாசற்றவனாக இருத்தல் வேண்டும். "ஆசிரியனுடைய ஒழுக்கத்தையும் நடத்தையையும் பற்றி நாம் பார்ப்பானேன்? அவன் சொல்வது சரியாவென்று நாம் பார்த்தால் போதாதா?" என்று கேட்பவர் பலருண்டு. இது சரியன்று. சத்தியத்தைத் தான் உணரவும் அதை மற்றவர்களுக்குப் போதிக்கவும், இருதய பூர்வமான பரிசுத்தம் அத்தியாவசியம். அவன் முற்றிலும் பரிசுத்தமா யிருந்தாலொழிய, அவன் வார்த்தைக்கு மதிப்பும் பலனும் இரா. ஆசிரியனாயிருப்பவன் மாணாக்கனது புத்தியை அபிவிருத்தி செய்வதுமட்டு மல்லாமல், தன்னுடைய சக்தியில் கொஞ்சம் மாணாக்கனுக்குக் கொடுத்து உதவுகிறவனா யிருக்கவேண்டும். தன் உயர்ந்த தன்மையில் ஓர் அம்சத்தை மாணாக்கனுக்கு ஆசிரியன் அளிக்கிறான்.

ஆதலால் ஆசிரியன் பூரணத் தூய்மையுடையவனு யிருத்தல் அவசியம்.

மூன்ருவதாக, ஆசிரியன் ஒருவிதமான பயனையும் எதிர்பாராமல் போதிக்கவேண்டும். பணத்திற்காகவோ பெயருக்காகவோ அல்லது புகழுக்காகவோ அவன் கற்பிக்காமல், மாணுக்கன்பேரிலும் மானிட வர்க்கத்தின்கண்ணும் உள்ள அன்பின் காரணமாகவே அவன் தன் பணியை ஆற்றவேண்டும். அன்பின்மூலம் தான் ஆத்மிக உணர்ச்சியை ஒருவருக்கொருவர் அளிக்க முடியும். பொருள், புகழ்—இவற்றில் ஆசை யிருக்குமாயின் இவ்வன்பு உண்டாகாது.

ஆசிரியரிடத்தில் நம்பிக்கை

பெற்ருேர்களிடத்துப் பிள்ளைகள் எவ்விதம் ஒழுகவேண்டுமோ அவ்விதமே பிள்ளைகள் ஆசிரியர்களிடத்திலும் ஒழுக வேண்டும். ஆசிரியர்களிடத்தில் விஸ்வாசமும், வினயமும், பக்தியும் இல்லாவிடில் நம் மனத்தில் அறிவு வளர்ச்சி உண்டாகாது. இம்முறையைப் பின்பற்ருத தேசங்களில் ஆசிரியன் சாமானிய உபாத்தியாயனுகவே யிருக்கிருன். ஆசிரியன் தன் சம்பளத்திலேயே கருத்தை வைத்திருக்கிருன். மாணுக்கனும் ஏதோ வெறும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளும் நோக்கத்துடன்

வந்து, பாடம் முடிந்ததும் இருவரும் அவரவர் வழிச் செல்லுகின்றனர். ஆனால், தனி மனிதனிடம் அதிக நம்பிக்கை வைப்பது பலஹீனத்தையும் மூட நம்பிக்கையையும் சில சமயங்களில் உண்டாக்கலாம் என்பதை நாம் மறக்கலாகாது. ஆசிரியரைக் கடவுள்போல் வழிபடுங்கள்; ஆனால், அவரைக் குருட்டுத்தனமாய் நம்பாதீர்கள்! அவரைப் பூரண அன்புடன் நேசியுங்கள்; ஆனால், உங்கள் மனதின் சுயேச்சையைப் பலி கொடுக்காதீர்கள்!

ஆசிரியர்கள் தங்கள் சக்தி முழுவதையும் மாணாக்கர்களின் சுபாவத்தை யறிந்து கற்பிப்பதில் செலுத்த வேண்டும்.

மாணவரிடம் அனுதாபம்

உண்மையான அன்பும் அனுதாபமு மின்றிச் சரியாகக் கற்பிக்க முடியாது. எவரிடமும் இருக்கும் நம்பிக்கையைக் குலைக்கப் பிரயத்தனம் செய்யாதீர்கள்; உங்களால் முடியுமானால் அவனுக்கு உயர்ந்த எண்ணங்களைக் கொடுக்க முயற்சி செய்யுங்கள்! ஆனால், அஃதின்றி அவன் பற்றுக் கோடுகளைக் கெடுக்க வேண்டாம். தன்னிடம் பயில வரும் மாணவர்கள் ஆயிரம் பேர் இருப்பினும், ஒரு நிமிஷத்தில் அவர்கள் தன்மையை அறிந்து அவர்கள் போலத் தன்னையும் ஆக்கிக்கொள்ளுகிறவன்

தான் உண்மை ஆசிரியனவான். மாணக்கனுடைய மனதின் நிலைமைக்குத் தன் மனத்தையும் இழுத்துக்கொண்டு வந்து தன் மனது முழுதும் அவன் மனதின்பாற் செலுத்தி, அவன் பார்க்கிறமாதிரி விஷயங்களைப் பார்த்து, அவன் சிரமங்களை அறிந்து, அவற்றை நீக்கி, அவன் மனதில் அறிவுவளர்ச்சி உண்டாக்குபவனே உண்மை ஆசிரியனவான். அத்தகைய ஆசிரியர்களால்தான் உண்மையில் கல்வி பயிற்றுவிக்க முடியும்.

---

5. கல்வியும் ஒழுக்கமும்

ஒரு மனிதனுடைய ஒழுக்கம் அல்லது தன்மை எனப்படுவது, அவனுடைய மனப் போக்குகள் அனைத்தும் சேர்ந்து உண்டானது. அதனை அவனுடைய மனோ விருத்திகளின் மொத்தமெனச் சொல்லலாம். அவன் இன்பமும் துன்பமும் அனுபவிக்குங்காலை, அவை அவன் மனதில் பலவிதமான உணர்ச்சிகளை உண்டாக்கிச் செல்லுகின்றன. இவ்வுணர்ச்சிகளின் மொத்தத்தின் பயனே அவனுடைய குணம் அல்லது தன்மையாகிறது. நம் எண்ணங்களே நம் தன்மையை யுண்டாக்கி யிருக்கின்றன. இரும்பின்மேல் சம்மட்டி அடிக்கும் ஒவ்வோர் அடியும் அதன் ரூபத்தைத் தீர்மானம் செய்வதுபோல் நம் ஒவ்வோர் எண்ணமும் நம் தன்மையைத் தீர்மானம் செய்கிறது. வார்த்தைகள் அவ்வளவு முக்கியமானவை யல்ல. எண்ணங்களே அதி

நினைவின் சக்தி

முக்கியமானவை. அவற்றிற்கு ஆழ்ந்த சக்தியுண்டு. நெடுங் காலத்திற்குப்பின் நேரக்கூடியதை அவைதாம் தீர்மானம் செய்கின்றன. ஆதலால், நாம் நினைக்கும் நினைவுகளைப் பற்றி அதி ஜாக்கிரதையாக யிருக்க வேண்டும்.

இன்ப துன்பங்களின் பலன்

நமது மனத்தின் தன்மையை உண்டாக்குவதில் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் சம பங்கிருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் இன்பத்தைக் காட்டிலும் துன்பமே அதிக நன்மையைச் செய்திருப்பதாகப் புலப்படும். பூவுலகிலே தோன்றியுள்ள பெரியோருடைய சரித்திரங்களை ஆராய்ந்து பார்ப்போமாயின், பெரும்பாலும் அவர்களுடைய ஆத்ம சக்தியை வெளியே பிரகாசிக்கச் செய்தவை, இன்பத்தைக் காட்டிலும் துன்பமே யெனவும், செல்வத்தைக் காட்டிலும் வறுமையே யெனவும், புகழைக் காட்டிலும் இகழ்வே யெனவும் நாம் அறிந்து கொள்ளுவோம். செல்வத்திலேயே பிறந்து வளர்ந்து, சுகத்தையே அனுபவித்துக் கொண்டிருந்து, துக்கத்தைக் ஒரு சிறிதும் அறியாமலிருந்தவர்களில் எவர்தான் உயர்ந்த வாழ்வைப் பெற்றிருக்கிறார்கள்! மனது துக்க சாகரத்தில் ஆழ்ந்து, சுற்றிலும் கஷ்டங்கள் என்ற

புயல்காற்று அடித்துக் கொண்டிருக்க, உள்ளத்திலிருந்த நம்பிக்கையும் தைரியமும் அகன்று, வாழ்க்கையே அந்தகாரமயமாகத் தோன்றும்; இம்மாதிரி சந்தர்ப்பங்களில் தான் ஆத்மிக ஒளி பிரகாசிக்கிறது.

கருமத்தின் பயன்

மனமாகிய குளத்தில் கருமமாகிய கல் விழ, அதனுல் எழுந்த சிற்றலைகள் முற்றிலும் அழிந்து போகாமல், தாம் திரும்பி வருவதற்கு அறிகுறியாகிய அடையாளங்களை விட்டுச் செல்லுகின்றன. நாம் செய்கின்ற ஒவ்வொரு செய்கையும், சரீரத்தின் ஒவ்வோர் அசைவும், நினைக்கிற ஒவ்வொரு நினைவும், மனதில் அவற்றிற்கேற்ற சம்ஸ்காரங்களைப் பதியச் செய்கின்றன. இவை புறத்தே தோன்றுவதற்குத் தக்க வழியில்லாமலிருப்பினும், மனதில் அடங்கியிருந்து தொழில் செய்யும் இயல்பின. நாம் ஒவ்வொரு நிமிஷத்திலும் இருக்கும் நிலை, நாம் அதற்குமுன் செய்து கொண்டிருக்கும் மனே விருத்திகள் அல்லது சம்ஸ்காரங்களைப் பொறுத்தது. ஒவ்வொரு மனிதனுடைய ஒழுக்கமும் தன்மையும் அவனவன் செய்துகொண்ட சம்ஸ்காரங்களின் பயனுக ஏற்பட்டவை. நல்ல சம்ஸ்காரங்கள் நிறைந்திருப்பவன் நல்லவனுவான். தீய சம்ஸ்

காரங்கள் கூடியிருப்பவன் தீயவனாவான். ஒருவன் தீய வார்த்தைகளைப் பேசி, தீய எண்ணங்களை யெண்ணி, தீய செயல்களையே புரிந்தால் அவனுடைய உள்ளம் தீய சம்ஸ் காரங்களால் நிறைந்திருக்கும். இவ்விதம் உண்டாகிய தீய சம்ஸ்காரங்கள் அவனை அறி யாமலே, அவனது நினைவையும் தொழிலை யும் தம் வயப்படுத்தும் ஆற்றலுடையன. கெட்ட இம்மனோ விருத்திகள் இடைவிடாமல் தொழில் செய்து கொண்டிருக்கின்றன. இத் தீய சம்ஸ்காரங்களின் தொகுதியினாலேயே அவன் உந்தப்பட்டு, செலுத்தும் வழி செல்லு கிற யந்திரம்போல, அவன் தீய வழிகளில் செலுத்தப்படுவான்.

ஒழுக்கத்தின் உயர்வு

இங்ஙனமே ஒருவன் நல்லெண்ணங்களை எண்ணி நற்கருமமே புரிவானாயின், அவன் மனதில் நல்ல சுபாவமும் நல்ல சம்ஸ்காரமும் உண்டாகும். இவற்றின் பயனாக அவன் தன்னையும் அறியாமல் நற்கருமங்களில் ஈடு படுவான். அவன் நெடுங் காலமாக நற்கருமமே செய்து நல்லெண்ணங்களையே மனதில் கொண் டிருப்பானானால், அவன் எப்பொழுதும் எந்நிலை யிலும் நல்ல காரியங்களையே செய்வான். அவன் தீமைசெய்ய முயற்சி செய்தாலும்

அவன் உள்ளத்தில் அமைந்திருக்கும் நல்ல சம்ஸ்காரங்கள் அவனைத் தீய வழியில் செல்ல விடா. அவன் சதா நல்லுணர்ச்சியுடனேயே இருப்பான். இந்த நிலைமையிலுள்ள மனிதனை நல்ல சுபாவத்தில் நிலைநிற்கப் பெற்றவன் என்று சொல்லலாம். ஒருவனுடைய உண்மைத் தன்மையை ஆராயவேண்டின் அவனது பெருஞ் செயல்களைப் பார்க்க வேண்டாம்; அவன் தன் சாதாரண காரியங்களை எங்ஙனம் செய்கிறான் என்பதைக் கவனிப்பாயாக! அவைதாம் ஒருவனுடைய உண்மைத் தன்மையை வெளிக்காட்டும். சில சந்தர்ப்பங்களில் கயவரும் கீர்த்தி பெறுவதுண்டு. எந்த நிலைமையிலும் பெருந் தன்மையாக நடப்பவனே உண்மையிற் பெரியோனாவான்.

மனிதன் பழக்கத்தின் கட்டு

மனத்திலே இத்தகைய உணர்ச்சிகள் பல ஒன்று கூடும்போது அவை ஒரு பழக்கமாகின்றன. 'பழக்கம் இரண்டாம் இயற்கை,' என்று சாதாரணமாகச் சொல்லுவதுண்டு. முதல் இயற்கையும் அதுதான், மனிதனுடைய முழுவியற்கையும் அதுவேயாம். நாம் தற்காலத்தில் இருக்கும் நிலை எவ்விதமிருப்பினும் அது பழக்கத்தின் பயனாக ஏற்பட்டது. இவ்வுண்மை நமக்கு ஆறுதல் அளிக்கிறது.

ஏனெனில் நம் நிலை பழக்கத்தின் பயனாக விருப்பின், நம் நிலையை நாம் எப்பொழுதும் திருத்தி அமைத்துக்கொள்ள முடியும் என்று ஏற்படுகிறதன்றோ? தீய பழக்கங்களை மாற்ற ஒரே மருந்துண்டு. அவற்றிற்கு எதிரான நல்ல பழக்கங்கள்தாம் அவ்வருமருந்தாகும். துர்ப் பழக்கங்களை நல்ல பழக்கங்களால் தான் மாற்ற இயலும். இடைவிடாது நற்காரியங் களைச் செய்; பரிசுத்தமான எண்ணங்களை நினை! கெட்ட எண்ணங்களை அகற்ற அது வொன்றே வழியாகும். எந்த மனிதனையும் திருந்த முடியாதவனெனச் சொல்லாதே! ஏனெனில், அவன் பழக்கத்தின் கட்டே யாவான். புதிய நல்ல பழக்கங்களால் அவற் றைத் தடுக்க இயலும். மீண்டும் மீண்டும் செய்த நற்பழக்கங்களே உயர்ந்த ஒழுக்க மாகும். பழக்கங்களால் மாத்திரமே மனித னுடைய ஒழுக்கத் தடையைச் சீர்ப்படுத்தலாம்.

நம்மை ஆக்குவது நாமே

நம் கேடுகள் அனைத்திற்கும் காரணம் நம் உள்ளத்திலேயே இருக்கின்றது. அதற்காகத் தேவர்களையோ, கடவுளையோ குறை சொல்ல வேண்டாம். அல்லது அதை மாற்றமுடியா தெனச் சலிப்பும், சோர்வும் கொள்ளவும் வேண்டாம். வேறு ஒருவர் வந்து நமக்கு

உதவி செய்யாதவரையில் நாம் இந் நிலையி லிருந்து தப்ப முடியாதென நினைக்கவும் வேண்டாம்.

நாம் பட்டுப் பூச்சியைப்போ லிருக்கிறோம். பட்டுப்பூச்சி தன் உடலிலிருந்து உண்டாகும் வஸ்துவால் கூட்டைக் கட்டித் தன்னை அதற்குள் சிறை செய்து கொள்வதுபோல், நாம் செய்த காரியத்தின் பலனாகவும், பழக் கத்தின் பயனாகவுமே நம்மைப் பந்தப்படுத்திக் கொள்ளுகிறோம். அதற்குப் பிறகு நம் அறி யாமையின் காரணமாக நாம் பந்தப்பட்டிருப்ப தாக நினைத்து அழுகிறோம்; உதவிக்காகக் கூக்குரலிடுகிறோம். ஆனால், வெளியிலிருந்து நமக்கு உதவி வருவதேயில்லை. நம்முள் இருந்துதான் நமக்கு உதவி வருகிறது. உலகி லுள்ள எல்லாக் கடவுளிடமும் புலம்பிப் பாருங் கள்! நான் பல வருஷங்கள் இவ்விதம் புலம் பினேன். கடைசியில் எனக்கு உதவி கிடைத் தது. ஆனால், இவ்வுதவி என் உள்ளத்தி னின்றுதான் வந்தது. நான் தவறாகச் செய்து கொண்ட என் பந்தக் கட்டுகளை நானேதான் அறுத்து, அதனின்றும் விடுவித்துக் கொள்ள வேண்டி யிருந்தது. என்னுடைய வாழ்க்கை யில் பல தவறுகளை நான் செய்திருக்கிறேன். அத் தவறுகளைச் செய்யாமல் நான் என் தற்

கால நிலைமையை அடைந்திருக்க முடியாது. நீங்கள் வீட்டிற்குச் சென்று வேண்டு மென்றே தவறுகளைச் செய்யவேண்டுமென்று நான் சொல்லுவதாக நீங்கள் அர்த்தம் செய்து கொள்ளக்கூடாது. அவ்விதமாக என்னைத் தப்பர்த்தம் செய்துகொள்ள வேண்டாம். சென்றதைக் குறித்து வருந்தி மனச் சோர் வடையவேண்டா மென்பதே நான் அறி வுறுத்துவது.

நாம் தவறுகள் பல செய்கிறோம்; அதற் குக் காரணம் நமது பலவீனம். பலவீனத் திற்குக் காரணம் நம் அறியாமையேயாகும்.

தவறுகளுக்குக் காரணம் பலவீனம்

நம்மை யார் அறியாதவர்களா கச் செய்கிறார்கள்? நாமே நம் கண்களை நம் கைகளா லேயே மூடிக்கொண்டு இருட்டாக இருக்கிற தென்று முறையிடுகிறோம். மூடியிருக்கும் கையை எடுத்து விடுங்கள்; உடனே வெளிச்சம் தோன்றும். மனித ஆன்மாவின் சுயம்பிர காசச் சக்தியாகிய ஒளி நம்மை எப்பொழுதும் சூழ்ந்திருக்கிறது. தற்கால சாஸ்திரங்களைப் படித்த அறிவாளிகள் என்ன சொல்லுகிறார் கள் என்று நீங்கள் கேட்டதில்லையா? உயிர் களின் *பரிணாமத்தின் காரணம் என்ன?

---

* Evolution.

இச்சையே பரிணாமத்தின் அடிப்படையான காரணம் என்று அவர்கள் உரைக்கிறார்கள். ஒரு பிராணி ஒரு காரியத்தைச் செய்ய விரும்புகிறது. ஆனால், அதன் சுற்றுப் புறங்கள் அதற்கு அனுகூலமாகயிருப்பதில்லை. எனவே, அதன் சுற்றுப்புறத்திற்கேற்ற ஓர் உடம்பை அது உண்டாக்கிக் கொள்ளுகிறது. யார் அவ்வுடம்பை உண்டாக்குகிறார்கள்? அப் பிராணியேதான்; அதன் சித்தம் அதை யுண்டாக்குகிறது. உங்கள் சித்தத்தைப் பயன் படுத்துங்கள்; அஃது உங்களை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுபோகும். சித்தம் சர்வசக்தி வாய்ந்தது. சித்தம் சர்வசக்தி வாய்ந்ததாகயிருந்தால், "நாம் ஏன் சர்வசக்தி வாய்ந்தவர்களாகயில்லை?" என்று நீங்கள் கேட்கலாம்.

இக்கேள்வி கேட்கும்போது, நீங்கள் உங்கள் சிறு அகங்காரத்தை மட்டிலுமே நினைக்கிறீர்கள். ஒரு பரமாணுவிலிருந்து ஓர் உயர்ந்த மனிதனாக நீங்கள் வளர்ந்ததைத் திரும்பிப் பாருங்கள்! இதையெல்லாம் செய்தது யார்? உங்கள் சித்தம்தான். இவ்வளவு உயர்வாக வளரச்செய்த உங்கள் சித்தம் உங்களை இன்னும் உயரக் கொண்டுபோகும். உங்களுக்கு வேண்டியதெல்லாம் வாழ்க்கையில் உயர்ந்த ஒழுக்கமும், சித்தத்தில் பலமும்தான்.

சீரிய ஒழுக்கமே தேவை

நீங்கள் உங்கள் வீட்டிற்குச் சென்று தலைக்கு முக்காடிட்டு, நீங்கள் செய்த தவறுதல்களுக்காக ஆயுட்கால முழுவதும் அழுதாலும், அஃது உங்களுக்கு உதவாது. அது உங்களை இன்னும் அதிகமாகப் பலவீனப் படுத்தும். இதுவரையில் பல்லாயிரக் கணக்கான வருஷங்களாக அந்தகாரம் நிறைந்திருந்தால், நீங்கள் வந்து அழுதவுடனே அவ் வந்தகாரம் நீங்குமா? தீக்குச்சியை உரைத்த அளவிலே உடனே வெளிச்சம் தோன்றும். அதைப் போன்று 'நான் கெட்ட செய்கைகள் செய்திருக்கிறேன். தவறுகள் செய்திருக்கிறேன்' என்று வாழ்க்கை முழுதும் அழுது புலம்பினாலும் யாதுபயன்? நாம் செய்த குற்றங்களை நமக்குச் சொல்ல எந்தச் சாமியோ அல்லது பூதமோ தேவையில்லை. வெளிச்சத்தைக் கொண்டு வந்தால், இருள் உடனே மறையும். உயர்ந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து உங்களுக்குள் மறைந்திருக்கும் சுயஞ்சோதியான சச்சிதானந்தப் பரம்பொருளை வெளிப்படுத்துங்கள்; மற்றவர்களும் அதை வெளிப்படுத்தும்படி உதவுங்கள்! அதுவே நமக்கு இப்பொழுது தேவை.

6. மதக் கல்வி

எல்லாக் கல்வி முறைகளிலும் மதக் கல்வி மிக முக்கியமான அம்சமாய் இருக்க வேண்டும்.

மகா புருஷர்கள் வழிபாடு

மதக் கல்வி என்பதில் என்னுடைய மதத்தைப் பற்றிய கல்வியையோ அல்லது எந்தத் தனிப்பட்ட ஒருவருடைய மதத்தைப் பற்றிய கல்வியையோ அல்லது, ஒரு கூட்டத்தினருடைய மதத்தைப் பற்றிய கல்வியையோ நான் குறிப்பிடவில்லை. மனித வாழ்க்கைக்கு என்றும் அடிப்படையாக இருந்துவரும் சாஸ்வதமான ஆத்மிக இயற்கை விதிகள் மக்கள் அறியுமாறு எடுத்துச் சொல்லப்பட வேண்டுமென்பதே என் கருத்து. முதலில் ஆத்மிகத் துறையில் சிறந்து விளங்கி யிருக்கும் நாயனர்கள், ஆழ்வாராதிகள் முதலிய மகா புருஷர்களின் வாழ்க்கைகள் பக்தியுடன் கொண்டாடப் படும்படி செய்யவேண்டும். என்றுமழியா, சாஸ்வதமான, ஆத்மிக உண்மைகளைத் தங்கள் வாழ்க்கையில் அனுஷ்டித்த அவதார

புருஷர்களான ஸ்ரீ ராமர், ஸ்ரீ கிருஷ்ணர், ஸ்ரீ மகா வீரர் (அனுமார்), ஸ்ரீ ராமகிருஷ்ணர் முதலியவர்கள் மக்களுக்குத் தங்கள் வாழ்க்கையில் பின்பற்றும் இலட்சியங்களாக விளங்கும்படி செய்யவேண்டும்.

'ஆண்மையூட்டும் வழிபாடு'

பிருந்தாவனக் கிருஷ்ணனைத் தற்சமயம் கொஞ்சம் தள்ளி வைப்போம். ஒரு மகா யுத்தத்தின் மத்தியில் அஞ்சாது நின்று, சிங்கம்போல் கர்ச்சித்து, கீதையை உபதேசித்து, அர்ஜுனனுடைய சோர்வை நீக்கி ஆண்மையை யூட்டிய அந்தக் கிருஷ்ணனுடைய வழிபாட்டையே நாம் இப்பொழுது பரப்பவேண்டும். அத்துடன் சக்தி உபாசனையும் அனுதினமும் செய்யப்பட வேண்டும். நமக்கு இப்பொழுது வேண்டுவது வீரத்தையும், ஆண்மையையும் உண்டாக்கக் கூடிய இலட்சியங்களே. ஒப்பற்ற ஆண்மையுடனும், அளவற்ற வேகத்துடனும் தியாகத்தைக் கவசமாக ஏற்று, ஞானத்தைக் கத்தியாகக் கொண்டு, உண்மைக்காக உழைத்து, அம்முயற்சியில், அவசியமானல், தங்கள் உயிரையும் தத்தம் செய்யக் கூடிய வீரம் செறிந்த, ஆண்டகைகளே நமக்கு இப்பொழுது இலட்சியமாகத் தேவை. போர் முனையில் எதற்கும் அஞ்சாது

போர்புரியத் தக்க உணர்ச்சிதான் நமக்கு இப் பொழுது அவசியம்.

அந்த ராமபக்தரான மகா வீரரையே (அனுமார்) உங்கள் இலட்சியமாக்கிக் கொள்ளுங்கள். ராமர் ஆணையால் அவர் கடலையும் கடந்தார். அவர் உடலை உருக்கவும்

சேவா லட்சியம்

சாவை எதிர்க்கவும் ஒரு சிறிதும் அச்சப்பட வில்லை. அவர் சிறந்த அறிவாளி. புலன்க ளனைத்தும் அவர் வயப்பட்டிருந்தன. அவர் வாழ்க்கை முழுதும் ராமசேவையில் கழிக்கப் பட்டது. சேவைக்கு இலட்சியமாக இருக்கும் இவரை ஆதாரமாக வைத்துக் கொண்டு உங்கள் வாழ்க்கையை நடத்துங்கள்! சேவா லட்சியத்தை மேற்கொண்டால் மற்ற அருங் குணங்க ளனைத்தும் தாமே நம் வாழ்க்கையில் பரிணமிக்கும். குருவின் உபதேசங்களை முற்றிலு மேற்று அதன்படி ஒழுகுதலும், பிரமசரியத்தை வழுவாது கடைப் பிடித் தலுமே, எவ்விஷயத்திலும் வெற்றிபெறும் இரகசியமாகும். அனுமார் சேவைக்கு இலட் சியமாக இருப்பதுபோல் ஆண்மைக்கும் வீரத் திற்கும் எடுத்துக்காட்டாக இருக்கிறார். உலகம் அவர் வீரத்தைக் கண்டு பிரமிக்கிறது. ராம சேவையில் தம்மை முற்றிலும் தியாகம் செய்வ

தில் அவருக்குக் கிஞ்சித்தும் கவலையில்லை. வேறு எவ்விஷயத்திலும் அவருக்கு அக்கறை யில்லை .இராகவனுடைய உத்தரவைச் சிரமேற் ருங்கி அதன்படி நடப்பதே அவர் வாழ்க்கை யில் கொண்டிருந்த ஒரேவிரதம். அத்தகைய பூரண பக்தியே இப்பொழுது நமக்குத் தேவை.

தற்காலத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் கோபிக ளுடன் விளையாடிய தெய்விக லீலையை ஆராதிப் பது நமக்கு நல்லதன்று. வெறும் புல்லாங் குழலை வாசித்து நாட்டைப் புனருத்தாரணம் செய்ய முடி யாது. மிருதங்கத்தையும் ஜால் ராவையும் அடித்துக் கொண்டு பாடுவதும் ஆடுவதும் நம்மைத் தாழ்த்தி விட்டன. பரமனை நினைத்துப் பாடுவதும் ஆடுவதும் மிக உயர்ந்த சாதனைகள்தாம். ஆனல், அதற்கத்யாவசியமான பூரண பரிசுத்தமின்றி நாம் இச்சாதனைகளி லீடுபட்டது நம்மைத் தாழ்த்தித் தமோகுணத்தில் தள்ளியிருக்கிறது. நம் நாட்டில் பேரிகைகள் செய்வதில்லையா? யுத்த பேரிகைகள் இந்தியாவில் கிடைப்ப தில்லையா? இவற்றின் ஆழ்ந்த சப்தங்களை நம் இளைஞர்கள் கேட்கும்படி செய்யுங்கள்! மிருதுவான சப்தங்களையும் சங்கீதங்களையும் இளமையிலிருந்து கேட்டு நம் மக்கள் ஆண்

வீரமுரசு கொட்டுங்கள்!

மையை இழந்துவிட்டனர். மறுபடியும் வெற்றி முரசைக் கொட்டுங்கள்! பேரிகைகளை அடியுங்கள்! அவை உண்டாக்கும் ஆழ்ந்த சப்தங்களுடன் "மகாவீர், மகாவீர்" என்ற சப்தம் முழங்க, உலக முழுதும் "ஹரஹர மஹாதேவ்" என்ற நாதத்வனி கேட்கட்டும். பெண்மையை உண்டாக்கக் கூடிய மிருதுவான ஸ்வரங்களைக் கொஞ்சகாலத்திற்கு நிறுத்தி வைப்போமாக. வீரத்தை உண்டாக்கக் கூடிய பேரிகை முழக்கத்தையே நாம் இப்பொழுது கேட்டுப் பழக வேண்டும். இடிமுழக்கம் போன்ற வேதத் தொனிகளை மறுப்டியும் கிளப்புவோம். அவை மூலம் நாட்டில் புத்துயிர் ஊட்டவேண்டும். எல்லா விஷயங்க்ளிலும் எளிமையும் வீரமும் செறிந்த தன்மையை மறுபடியும் பிறப்பிக்க வேண்டும். இத்தகைய தன்மையை ஒருவன் பெற்ருல் ஆயிரக்கணக்கான பேர் அவனைப் பின்பற்றுவார்கள். நம் இலட்சியத்திலிருந்து ஓர் அங்குலமும் பிறழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எப்பொழுதும் தைரியத்தைக் கை விடாதீர்கள்! உண்ணும்போதும், உறங்கும் போதும், உடுத்தும்போதும் அல்லது பாடும் போதும், விளையாடும்போதும், அல்லது இன்பத்திலும் துன்பத்திலும், எப்பொழுதும் உயர்ந்த ஆண்மையைக் கடைப்பிடியுங்கள்!

எச்சமயத்தும் எந்த விதமான பலவீனமும் உங்கள் மனதில் புகவிடாதீர்கள்! அனுமனை நினைத்துக் கொள்ளுங்கள்; பராசக்தியை மனதில் வையுங்கள்; உங்களுடைய பலவீனங்கள், கோழைத் தன்மை யாவும் மறையக் காண்பீர்கள்!

புது மதம்: தன்னம்பிக்கை

கடவுளிடம் நம்பிக்கை யில்லாதவனை நாஸ்திகனென்று பழைய மதங்கள் கூறின. ஆனால், தன்னிடத்தில் நம்பிக்கை யில்லாதவனையே நாஸ்திகனென்று புதுமதம் கூறுகின்றது. இந்தத் தன்னம்பிக்கை சுயநலத்தைக் கோரும் தனது என்ற எண்ணம் அன்று. இந் நம்பிக்கை எல்லோரிடமும் வைக்க வேண்டிய ஒரு விசுவாசத்தைக் குறிக்கும். ஏனெனில், நாமே அனைத்துமா யிருக்கிறோம். எனவே, சுய அன்பு என்பது, மனிதர்கள் மிருகங்கள் முதலிய அனைவர் பேரிலும் அன்பு கொள்வதாகப் பொருள்படும். நாமே அனைத்துமா யிருக்கிறோம் என்ற இத்தகைய நம்பிக்கையே நமக்கு என்றும் எக்காலத்தும் பேருதவியாக இருக்கத்தக்கது. மக்களில் பெரும்பாலோர் தன்னம்பிக்கை உடையவர்களாக இருந்தால் உலகில் இப்பொழுது காணப்படும் துன்பங்களில் பெரும் பகுதி மறைந்திருக்கும். உலகிற்

சிறந்த மக்களின் சரித்திரங்களை ஆராய்ந்து பார்த்தால், அவர்களிடம் இருந்த தன்னம்பிக்கையே அவர்களுக்கு ஊக்கமளித்து, அவர்களைச் சிறப்பெய்தச் செய்திருக்கிறதென்று புலப்படும். தாங்கள் சிறந்த காரியங்களைச் செய்யத் தோன்றியவர்கள் என்ற எண்ணத்துடனேயே வளர்ந்து, அவர்கள் உண்மையிலே சிறந்த காரியங்களைச் சாதித்திருக்கின்றனர்.

அளவற்ற பலமே சமயமெனப்படும். பலத்துடன் வாழ்வதே நற்கருமம். பலவீனமே பாவம். எல்லாப் பாவங்களையும், எல்லாக் கெட்ட செய்கைகளையும் 'பலவீனம்' என்ற ஒரு வார்த்தையில் குறிப்பிட்டு விடலாம். பலவீனமே எல்லாக் கெட்ட செய்கைகளுக்கும் அடிப்படையாக விருக்கிறது. பலவீனத்தினலேயே ஒருவன் சுயநல முள்ளவனுகிருன். ஒரு மனிதன் மற்ருெரு மனிதனை வருத்தும்படி செய்வதும் பலவீனமே. எல்லோரும் அவர்கள் யார் என்று உணரட்டும். 'சோஹம்—நானே அனைத்தும்' என்ற எண்ணத்தை அல்லும் பகலும் அனவரதமும் நினைக்கட்டும். குழந்தைப் பருவத்திலிருந்தே 'நானே சர்வ சக்தி வாய்ந்த அந்தப் பரம புருஷனுவேன்' என்ற நினைவுடன் எல்லோரும் வளரட்டும். இவ்வெண்

அளவற்ற பலம்

ணத்தை முதலில் அவர்கள் கேட்கட்டும். அதற்குமேல் அதன் உண்மையைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கட்டும். அச்சிந்தனையிலிருந்து உலகம் இதுவரை கண்டிராத மகத்தான காரியங்கள் உண்டாவதைக் காண்பீர்கள்.

சத்தியம்

சத்தியத்தைத் தைரியமாக மேற்கொள்ளுங்கள். சத்தியம் சாஸ்வதமானது. சத்தியமே எல்லா ஆன்மாக்களுக்கும் அடிப்படை. சத்தியத்தை அறிய உரைகல் ஒன்று உள்ளது. எந்த ஒன்று தேகத்திற்குப் பலவீனத்தைத் தருகிறதோ, எந்த ஒன்று நமது அறிவையும் உணர்ச்சியையும் பலவீனமாக்குகிறதோ அந்த ஒன்றை உடனே நஞ்சென ஒதுக்கித் தள்ளுங்கள்! அஃது உயிரற்றது; அஃது உண்மையாகாது. எது பலத்தைக் கொடுக்கிறதோ அதுதான் உண்மை. உண்மை பரிசுத்தமானது. உண்மையே சர்வ ஞானத்தையும் அளிப்பது. ஆகையால் உண்மை யென்பது பலத்தைத் தரவேண்டும்; அறிவுச் சுடரை உண்டாக்கவேண்டும்; வீரியத்தைப் பெருக்கவேண்டும். உங்கள் அரிய பழைய உபநிடதங்களை மறுபடியும் போற்றிப் படியுங்கள்! ஞானமும் ஒளியும் சக்தியும் கொடுக்கக்கூடிய பல தத்துவங்கள் அதில் நிறைந்திருக்கின்றன. இவ்

வுயர்ந்த தத்துவங்களைக் கடைப்பிடியுங்கள்! உலகிலுள்ள உயர்ந்த உண்மைகள் கிரகிப்பதற்கு மிகவும் எளியவை. நாம் இப்பொழுது உயிருடன் இருக்கிறோம் என்பதைப்பற்றி யாருக்காவது சந்தேகம் இருக்கிறதா? அது போல், தாமே விளக்கமா யிருப்பவை. உபநிஷத்துக்களின் இவ்வுயர்ந்த உண்மைகள் உங்கள் முன் நிற்கின்றன. அவற்றை மேற்கொள்ளுங்கள்; அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து நடவுங்கள்! அப்பொழுதுதான் இந்தியாவின் இலட்சியம் கைகூடும்.

உடற் பலம்

நமது உடலின் பலக்குறைவே நம் கஷ்டங்களில் சுமார் மூன்றில் ஒரு பங்குக்குக் காரணமா யிருக்கிறது. நாம் சோம்பேறிகளாகி விட்டோம். நம்மால் எக்காரியத்தையும் சேர்ந்து செய்ய இயலுகிறதில்லை. கிளியைப்போன்று பல விஷயங்களைப்பற்றிப் பேசுகிறோம்! ஆனால் அவற்றைச் செய்வதில்லை. காரியத்தில் ஈடுபடாமல், வெறும் பேச்சே நமக்கு வழக்கமாய் விட்டது. இதற்குக் காரணமென்ன? உடல் பலவீனம் தான். இத்தகைய உடலிலிருக்கும் வலிமையற்ற மூளையால் எதையும் சாதிக்க முடிவதில்லை. நம் இளைஞர்கள் முதலில் பலம் பெறவேண்டும். சமய உணர்ச்சி பின்னர்த் தானே ஏற்படும்.

என் வாலிப நண்பர்களே! நீங்கள் பலசாலிக ளாகுங்கள்! இதுவே நான் உங்களுக்குக் கொடுக்கும் புத்திமதி. கீதையைவிட, உறுதி யளிக்கும் விளையாட்டுகளின்மூலம் நீங்கள் சுவர்க்கத்திற்கருகில் செல்வீர்கள். உங்கள் தசை நார்களும் புஜங்களும் அதிக வலிவு பெறும்போது கீதையை இன்னும் நன்ருக அறிந்து கொள்ளுவீர்கள். உங்கள் நரம்புக் குழாய்களில் இன்னும் சிறிது வலிவுள்ள இரத்தம் ஓடும்போது ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் மகத்தான ஞானத்தையும் மகத்தான பலத்தையும் இன்னும் நன்ருக அறிந்துகொள்வீர்கள். உங்கள் முதுகு வளையாமல், உங்கள் கால்கள் தளர்வுருமல் நீங்கள் நிமிர்ந்து நிற்கும்போதே, உங்கள் மனதில் ஆண்மையும் வீரமும் தோன்றும்போதே, உபநிடதங்களின் நுட்பத்தையும், ஆன்மாவின் மகிமையையும் நீங்கள் நன்குணர்வீர்கள்.

அஞ்சாமை

பலம், வலிமை, சக்தி இவ்வெண்ணங்களையே உபநிஷதங்கள் ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் உலகிற்கு எடுத்தோதுகின்றன வென்பதை நான் உணர்வேன். இவ்வொரே நூலில்தான் ("அபீ") 'அஞ்சாமை, அஞ்சாமை' என்ற பதங்கள் உலகிலுள்ள எல்லா நூல்களைக் காட்

டிலும் அதிகமாக உபயோகப் படுத்தப்பட் டிருக்கின்றன. வேறு எந்த மதத்தின் நூலி லும் மனிதனுக்கோ, தெய்வத்திற்கோ இப் பதம் கொடுக்கப்படவில்லை. பல்லாயிர வருஷங் களுக்குமுன் நடைபெற்ற காட்சியொன்று என் மனக்கண்முன் இப்பொழுது தோன்று கிறது. அலெக்ஸாண்டர் சக்கரவர்த்தி உலகை வென்று நமது சிந்து நதிக்கரையில் நின்று கொண்டிருக்கிறான். அங்கு காடுகளில் வசித் துக்கொண்டிருந்த நம் துறவிகளிலொருவ ரிடம் பேசிக் கொண்டிருக்கிறான். அந்த வயோதிக சாது உடையேதுமின்றி ஒரு கல்லின்மேல் உட்கார்ந்துகொண் டிருக்கிறார். சக்கரவர்த்தி அவ்வயோதிகரிடமிருந்த ஒப் பற்ற ஞானத்தைக் கண்டு ஆச்சரியமுற்றுத் தன் நாடாகிய கிரீஸ் தேசத்திற்கு வரும்படி அவரை அழைக்கிறான். அங்கு வந்தால் பொருளும் பதவியும் கொடுப்பதாக ஆசை காட்டுகிறான். ஆனால், அப்பெரியார் அந்த ஆசை வார்த்தைகளைக் கேட்டுப் புன்முறுவல் செய்கிறார்; மன்னனுடைய வார்த்தைகளை மறுக்கிறார். சக்கரவர்த்திக்குக் கோபம் வந்து விடுகிறது. "நீர் வராவிடில் இதோ உம்மைக் கொல்லுவேன்!" என்று பயமுறுத்துகிறான். கிழவர் கொல்லென்று சிரித்துச் சொல்லுகிறார்.

"இப்பொழுது நீ பொய் சொன்ன மாதிரி எப்பொழுதும் சொன்னதேயில்லை. யார் என்னைக் கொல்ல முடியும்? நான் அழிவற்ற ஆன்மா! எனக்குப் பிறப்பும் இறப்பும் ஏது? என்கிறார். அதுவன்றோ பலம்! அதுவன்றோ ஆண்மை!

உபநிடதங்கள் சக்திச் சுரங்கங்கள்

நம்மைப் பலவீனப்படுத்த ஆயிரம் விஷயங்களிருக்கின்றன. வெகு நாட்களாக வெறுங் கதைகள் பேசிக் கொண்டிருந்துவிட்டோம். ஆதலால் நண்பர்களே! உங்களுடன் பிறந்தவன், உங்களுடனேயே வளர்ந்து, உங்களுடனேயே மாளுபவன் என்ற உரிமையுடன் சொல்லுகிறேன், கேளுங்கள்: நமக்கு வேண்டியது வலிமை, வலிமை, வலிமையே என்று முக்காலும் கூறுகிறேன். உபநிடதங்கள் அவ்வலிமையின் பெருஞ் சுரங்கங்களாக இருக்கின்றன. உலக முழுவதற்கும் அளவற்ற சக்தியூட்டுவதற்குப் போதிய வலிமை அவற்றிலிருக்கிறது. அவற்றின் மூலம் உலகமனைத்திற்கும் புத்துயிரும் புது ஊக்கமும் தரலாம். எல்லாத் தேசங்களிலும் சமூகங்களிலும் மதங்களிலும் உள்ள பலவீனர்கள், துன்புற்றவர்கள், தாழ்த்தப்பட்டவர்களாகிய அனைவரையும், பலங்கொண்டெழுந்து

நின்று விடுதலை பெறும்படி உபநிடதங்கள் பேரிகை கொட்டிக் கூவியழைக்கின்றன. சரீர விடுதலை, மனோவிடுதலை, ஆன்ம விடுதலை எனும் இவையே உபநிடதங்கள் உபதேசிக்கும் மந்திரங்களாகும்.

ஆனால், சமய நூல்களைப் பயிலல் மட்டும் நம்மை ஆத்மிக உணர்ச்சி உடையவர்களாகச் செய்யாது. உலகிலுள்ள சமய நூல்கள் அனைத்தையும் நாம் பயின்றிருக்கலாம். எனினும் நமக்குக் கடவுளைப்பற்றியோ மதத்தைப் பற்றியோ ஒன்றும் தெரியாமலிருக்கலாம். நம் ஆயுள் முழுதும் நாம் பேசலாம் அல்லது வாதம் செய்யலாம். ஆனால், உண்மையை நாமே அனுபவித்து உணரும் வரை நாம் ஒன்றும் அறியாதவர்களாகத்தான் இருப்போம். ஒருவனுக்குச் சில வைத்தியப் புத்தகங்கள் மாத்திரம் கொடுத்து அவனை இரண வைத்தியன் (சர்ஜன்) ஆக்கமுடியுமா? ஒரு தேசத்தைப் பார்க்க விரும்பும் எனக்கு அதன் படத்தைக் காண்பித்துத் திருப்தி செய்ய முடியுமா? இன்னும் பூரணமான ஞானத்தை அடைய ஆர்வத்தைத்தான் இப்படங்கள் உண்டாக்கும். அதற்குமேல் அவை பயன்படா. கோவில்களும், புத்தகங்களும், நியமங்களும் ஆத்மிக

அனுபூதியே ஆத்மிக வாழ்வின் அடிப்படை

வாழ்க்கையின் முதற்படிகளே யாகும். ஆத்மிக ஞானம் விதிகளிலும் வாதங்களிலும் இல்லை. அது வாழ்க்கையைப் பொறுத்தது. அனுபூதியே ஆத்மிக வாழ்க்கையின் அடிப் படையாகும்.

இதய உணர்ச்சியை வளருங்கள் !

உலகிலுள்ள அனைவரையும்விட நாம் புத்தியில் சிரேஷ்டமானவர்களாக விருக்கலாம். எனினும், தெய்வ பக்திக்கும் நமக்கும் வெகுதூர மிருக்கலாம். ஆராய்ந்து பார்த்தால் புத்திக்கூர்மை மிகவும் வாய்ந்த பலர் தெய்விக உணர்ச்சியே அற்றிருக்கின்றனர். மேனாட்டுக் கல்வி முறையில் ஒரு பெருங்குறை யிருக்கிறது. அக் கல்வி பக்தியுணர்ச்சி யின்றி வெறும் புத்திக்கு மாத்திரம் பயிற்சி அளிக்கிறது. இதயம் இல்லாமல் வெறும் புத்திக்கூர்மை மாத்திரம் ஒருவனை அதிக சுயநல முடையவனாகத்தான் செய்யும். இதயம் ஒன்று சொல்லி, புத்தி வேறு ஒன்று உரைப்பின், இதயத்தையே பின்பற்ற வேண்டும். இதய பூர்வமான உணர்ச்சி ஒருவனை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு போகும். புத்தியால் எப்பொழுதும் அவ்வளவு உயர்ந்த நிலைமைக்கு அழைத்துச் செல்ல முடியாது. இதயம் புத்திக்கு மேல் சென்று

தெய்வ சன்னிதானத்தை அடைய முடியும். ஆதலால், எப்பொழுதும் இதய உணர்ச்சியை நன்றாக வளருங்கள்! இதயத்தின் மூலம் ஆண்டவன் பேசுகிறான்.

மதவெறி ஒரு நோய்

மனிதனிடம் பெண்டு பிள்ளைகள், வீடு வாசல், தேசம், மதம்போன்ற பலவித வாஞ்சைகளுண்டு. அவை அனைத்திலும் மிகத் தீவிரமானது. சமயத்தின் காரணமாக உண்டாயிருப்பது தான். உலக சரித்திரத்திலேயே உன்னதமானதும் உயர்ந்த சாந்தி அளிக்கக் கூடியதுமான வார்த்தைகள் மத உணர்ச்சியில் முதிர்ந்த பெரியோர்களால்தான் பேசப்பட்டிருக்கின்றன. ஆனால் மிகக் கொடுமையான வசவு வார்த்தைகளுக்கும் மத உணர்ச்சி நிறைந்தவர்களே பிறப்பிடமாக இருந்திருக்கின்றனர். ஒவ்வொரு மதமும் சில விதிகளை உண்டாக்கி, அவைதான் உண்மையானவை என்று வற்புறுத்துகின்றன. சிலர் கத்தியின் முனையில் அவற்றை நம்பும்படி கட்டாயப்படுத்துகின்றனர். இங்ஙனம் செய்பவர்கள் சுபாவத்தில் கெட்ட மனிதர்களும் அல்லர். மதவெறி என்ற ஒருவித நோய் அவர்களை இவ்விதம் செய்யும்படி தூண்டுகிறது. மதத்தின் பெயரால் பல போர்கள் தொடுக்கப்

பட்டிருக்கின்றன. ஆனால், மதவெறி நிறைந்திருக்கும் மக்களின் மத்தியிலும், பல சமயங்களில் அவ்வப்போது சில ஞானிகள் தோன்றி, "சண்டை சச்சரவுகளை நிறுத்துங்கள் ! மதங்கள் யாவும் ஒரே ஈசனை நாடுபவை" என்று ஒற்றுமை யுணர்ச்சியை உபதேசித்திருக்கின்றனர்.

தற்காலமும் இத்தகைய மகான் ஒருவர் தோன்றுவதற்கு ஏற்றதாயிருந்தது. அவர் சகல சமயங்களிலும் ஒரே இறைவன், (ஒரே சக்தி) நின்றியக்கம் செய்கிறான் என்பதை யறிந்தார். ஒவ்வொரு மனிதனிலும், ஒவ்வொரு ஜீவஜந்துவிலும் அவர் ஈசனைக் கண்டார். பலவீனர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், ஏழைகள் என்ற இவர்கள்பால் அவர் இதயம் மிக இரங்கி அழுதது. இத்துடன் அவருடைய அபார மூளை, இந்தியாவில் மட்டுமல்லாமல் உலக முழுதுமிருக்கும் மதங்களிலுள்ள அடிப்படையான ஒற்றுமைகளை யறிந்து, உலக முழுதும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு சமயக் கோட்பாட்டை யுண்டாக்கியது. அத்தகைய மனிதர் ஒருவர் பிறந்தார். அவர் திருப்பாதங்களில் பல வருஷங்கள் அமர்ந்து, அவர் உபதேசங்களைப் பெறக்கூடிய

ஸ்ரீராமகிருஷ்ணரின் சமதிருஷ்டி

பாக்கியத்தை நான் பெற்றேன். என் குரு நாதரிடமிருந்து உயர்ந்த ஓர் உண்மையை நான் அறிந்தேன். உலகில் தோன்றியிருக்கும் மதங்கள் யாவும் ஒன்றுக்கொன்று விரோதமானவையல்ல என்ற மகத்தான உண்மையை அவரிடம் உணர்ந்தேன். ஒரே சனுதன, சாஸ்வதமான மதத்தின் பல அம்சங்களே அவை என்பதை அறிந்தேன். ஸ்ரீ ராமகிருஷ்ணதேவர் எவருக்கு விரோதமாகவும் ஒரு கடுமையான வார்த்தைகூடப் பேசியதில்லே. அவருடைய பேரன்பும் சமதிருஷ்டியும் எல்லாச் சமயத்தோரையும் அவரைத் தங்கள் சமயத்தவர் என்று நினைக்கும்படி செய்தது. அவர் எல்லோரையும் நேசித்தார். எல்லா மதங்களையும் உண்மையென அவர் நம்பினார். மதவெறியை அகற்றுவதிலேயே அவருடைய ஆயுள் முழுவதும் செலவு செய்யப்பட்டது.

எல்லா மதங்களையும் ஏற்க :

நாம் வேற்றுமையை அகற்றி ஒற்றுமையைக் கடைப்பிடிப்போமாக! எம்மதத்தையும் புறக்கணிக்காது ஏற்றுக் கொள்வதே நம் எண்ணமாக இருக்கவேண்டும். அவற்றைச் சகித்துக்கொள்வோம் என்பதன்று. ஏனெனில் அச்சகிப்பு பிறமதங்கள் தாழ்ந்தவை என்ற எண்ணத்தால் ஏற்படுகிறது. நீங்கள் அவ்விதம்

நினைத்தால் அது கடவுள்பால் செய்யும் அபசாரமன்றோ? நான் உலகில் தோன்றிய மதங்களனைத்தையும் ஏற்றுக்கொள்ளுகிறேன். அவை எல்லாவற்றையும் நான் பின்பற்றுகிறேன். அவை ஒவ்வொன்றும் எப்படி எப்படி ஆண்டவனை வணங்குகின்றனவோ, அவ்விதமே நானும் வணங்குகின்றேன். முகம்மதியர்களுடன் சேர்ந்து அவர்கள் மசூதிகளுக்குச் செல்லுவேன். கிறிஸ்துவர்களுடன் சேர்ந்து அவர்களுடைய ஆலயங்களுக்குச் சென்று சிலுவையின் முன் முழங்கால் படியிட்டுத் தொழுவேன். புத்தர்கள் கோவிலுக்குச் சென்று புத்தபகவானைப் போற்றிப் பக்தி செய்வேன். காடுகளிலும் குகைகளிலும் இருந்து, 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி,' அந்தர்யாமியாய் யாவர் மனதிலும் திகழும் அப்பேரொளியைத் தன்மனதில் காணச் சாதனைசெய்யும் ஹிந்துக்களிடம் சேர்ந்து நான் தியானம் செய்வேன்.

இது மாத்திரமல்லாமல் இனி வரப்போகும் எல்லா மதங்களுக்கும் என் இதயத்தைத் திறந்து வைத்திருப்பேன். ஆண்டவனுடைய அருட் புத்தகம் இதற்குள் முடிந்தாய் விட்டதா? அல்லது இன்னும் எதிர்

முடிவற்ற அருள் விளக்கம்

காலத்தில் புதிய பேருண்மைகளை மானிடர் உய்யப் புலப்படுத்திக் கொண்டிருக்குமா? ஆத்மிக உண்மைகளை வெளிப்படுத்தும் இம்மதங்கள் யாவும் ஆண்டவனுடைய அதி ஆச்சரியமான புத்தகமாகும். கிறிஸ்துவமத சுவிசேஷங்கள், ஹிந்துக்களின் வேதங்கள், முகம்மதியர்களின் கொரான், இன்னும் இதர மதத்தாரின் நூல்கள் என்ற இவை யாவும் அப்புத்தகத்தின் பல பக்கங்களாக விருக்கின்றன. இன்னும் அப்புத்தகத்தில் பல பக்கங்கள் வெளிவரக் காத்துக்கொண் டிருக்கின்றன. இதுவரை வந்த அனைத்தையும் ஏற்போமாக! இப்பொழுது தோன்றியிருக்கும் அருட்சுடரை அனுபவித்து, இனி வரவிருக்கும் ஞானவொளியை ஏற்க, நமது இதயத்தைத் திறந்து வைத்திருப்போமாக! இதுவரை தோன்றியிருக்கும் எல்லா மகான்களுக்கும், இப்பொழுது தோன்றியிருக்கும் பெரியோர்களுக்கும் நமது வணக்கம். இனிமேல் தோன்றவிருக்கும் எல்லா மகான்களுக்கும் நமது வணக்கத்தைச் செலுத்துவோமாக!

7. பெண் கல்வி

ஆண், பெண் அனைவரிடத்திலும் ஒரே ஆத்மா நின்றியக்குகிறது என்று நம் சமய நூல்கள் போதிக்கின்றன.

முற்கால இந்தியாவில்

அப்படியிருந்தும் ஆண் பெண்களை நடத்துவதில் நமது நாட்டில் ஏன் இவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறதென்பது புலப்படவில்லை. பலவிதமான கொடுமையான விதிகளைச் செய்தும், கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியும் பெண்களை வெறும் பிள்ளை பெறும் யந்திரங்களாகச் செய்துவிட்டனர். பிராமணர்களைத் தவிர மற்றவர்கள் வேதங்களைப் பயிலக் கூடாதென்று சட்டம் செய்த காலத்தில், பெண்களுடைய உரிமைகளும் பறிக்கப்பட்டன. வேதங்கள் எழுதப்பட்ட காலத்திலும், உபநிடதங்கள் உண்டாக்கப்பட்ட காலத்திலும், மைத்திரேயி, கார்கி முதலிய மாது சிரோமணிகள் கற்றுணர்ந்த ஞானிகளாகவும் ரிஷிகளாகவும் விளங்கியிருப்

பதைக் காண்பீர்கள். சமய நூல்கள் கற்றுணர்ந்த ஆயிரம் பேர்கள் இருந்த சபையில், கார்கி அஞ்சா நெஞ்சுடன் யஞ்ஞவல்கரை பிரமனைப் பற்றி விவாதத்திற்கு அழைக்கவில்லையா?

உண்மைத் தேவி வழிபாடு

மாதர்க்குரிய மதிப்பை அளிப்பதன் மூலமே எல்லாத் தேசத்தாரும் சிறப்பெய்தியிருக்கிறார்கள். எந்த நாடு பெண்களைச் சரியாக மதிக்கவில்லையோ, அந்தநாடு எப்பொழுதும் சிறப்பெய்தியதில்லை; இனிமேலும் சிறப்படையாது. உண்மையான சக்தி உபாசகன் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? பெண்களைப் பராசக்தியின் திருவடிவங்களெனக் கொண்டு அவர்களை வழிபடுகிறவனே உண்மைச் சக்தி உபாசகனாவான். அமெரிக்கா நாட்டு மக்கள் தங்கள் பெண்களை இவ்விதம் நினைத்துப் போற்றுகிறார்கள். எனவே, அவர்கள் செல்வத்திலும் கல்வியிலும் சிறந்து, சக்தியுடனும் சுதந்தரத்துடனும் வாழ்கிறார்கள். அன்னையின் திருவடிவங்களான நம் பெண் மக்களைச் சரியாக நடத்தாததே நாம் க்ஷீணித்துப் போனதற்கு முக்கியமான காரணமாகும். 'பெண்கள் கண்ணியத்துடன் எங்கு நடத்தப்படுகிறார்களோ, அங்குத் தேவர்கள் திருப்தி

யடைகிறார்கள். எங்கு அவர்கள் அவ்விதம் நடத்தப்படுவதில்லையோ, அங்கு எம்முயற்சியும் பலிக்காது" என்று மனுதர்ம சாஸ்திரம் கூறுகின்றது. பெண்களைத் துக்கத்தில் வைத்திருக்கும் எந்தக் குடும்பமோ, தேசமோ என்றும் மேன்மை அடையா.

கல்வியே அவர்கள் பிரச்னைகளைத் தீர்க்கும் அருமருந்து

பெண்கள் சம்பந்தமாகப் பல முக்கியமான பிரச்னைக ளிருக்கின்றன. ஆனால், கல்வியென்னும் அருமருந்தால் ஆற்றமுடியாதது அவற்றில் எதுவும் இல்லை. மனு என்னசொல்லியிருக்கிறார்? "ஆண்களுக்கு எவ்வளவு சிரத்தையுடன் கல்வி புகட்டப்படுகிறதோ, அவ்வளவு சிரத்தையுடன் பெண்களுக்கும் கல்வி புகட்டப்படவேண்டும். பிள்ளைகள் முப்பதாண்டு பிரமசரிய வாழ்க்கையை நடத்திய பிறகே, அவர்களுக்குப் பெற்றோர் மணம் முடிக்க வேண்டும். அவ்விதமே பெண்களுக்கும் செய்ய வேண்டும். அதுவரை அவர்களுக்குக் கல்வி யளிக்கப்படவேண்டும்." ஆனால் நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்? கொஞ்சமும் தன்னம்பிக்கையில்லாமல், பிறரை நம்பியே வாழ்க்கையை நடத்தும் முறையில் அவர்களை நாம் பழக்கியிருக்கிறோம். இதன் காரணமாக, ஒரு சிறு அபாயம் அல்லது ஆபத்து நேர்ந்த போதிலும்,

அழுவதைத் தவிர வேறு ஒன்றும் அறியாத வர்களாக அவர்கள் இருக்கின்றனர். பெண் கள், தங்கள் பிரச்னைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளும்படியான நிலைமைக்கு நாம் அவர்களைக் கொண்டுவர வேண்டும். நம் இந்திய சகோதரிகள் மற்றெந்த நாட்டுப் பெண் களைக் காட்டிலும், ஆற்றலில் குறைந்தவர்கள் அல்லர்.

பெண்கல்வியில் சமய உணர்ச்சி பிரதானம்

பெண்களுக்குரிய கல்வி சமய உணர்ச்சியைப் பிரதானமாகக் கொண்டு பரப்பப்பட வேண்டும். மற்ற பயிற்சிகள் அனைத்தும் சமயப் பயிற்சிக்கு அடங்கியவையாக யிருக்க வேண்டும். ஆத்மிக உணர்ச்சி, ஒழுக்கம், பிரம் மசரியம்—என்ற இவற்றை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். கற்பென்பது ஹிந்து மாதரின் பரம்பரைச் செல்வமாகும். ஆதலால் அதை அவர்கள் நன்ருக அறிவார்கள். முதலில் இந்த இலட்சியத்தை அவர்களிடையே உறுதிப் படுத்துங்கள்! இதன் மூலம் அவர்கள் சிறந்த மனோ வலிமை பெறுவார்கள். அவர்கள் இல்லறம் புகினும், பிரமசாரியாக விருக்க விரும்பினும்—எந்த நிலையிலிருப்பினும், தங் கள் ஒழுக்கத்தை விட்டுத் தவறுவதை விட உயிரை விடத்தக்க அஞ்சாத் தன்மையையும்,

திடச்சித்தத்தையும் அவர்களுக்கு இந்த இலட்சியம் அளிக்கும்.

சீதையே இலட்சியம்

இந்திய பாதர்கள் சீதையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வளரவேண்டும். சீதை ஒப்பற்றவள். அவளே இந்திய மாதரின் இலட்சியமாவாள். இந்தியாவில் தோன்றியிருக்கும் உயர்ந்த மாது சிரோமணிகள் அனைவரும் அவள் அடிச்சுவடுகளைப் பின்பற்றியவர்களே. அவள் தோன்றி இப்பொழுது ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு மேலாகி விட்டது. எனினும் அவளை வழிபடாத இந்திய மகனோ, மகளோ கிடையாது. இந்த சீதா பிராட்டி, கற்பின் அவதாரமாகிய அவள், பொறுமைக் கடலாயிருந்து சகல துக்கங்களையும் பொறுத்த அவள், எக்காலத்தும் நமக்கு உதாரணமாக விருப்பாள். அவச்சொல்லொன்றுமின்றி அளவற்ற துன்பத்தைப் பொறுத்த அவள்—அந்த கற்புக்கரசி எப்பொழுதும் நம் தேசீய இலட்சியமாயிருப்பாள். அவளுடைய உணர்ச்சியும் இலட்சியமும் நம் இரத்தத்துடன் இரத்தமாய்க் கலந்திருக்கின்றன. தற்காலத்தில் நம் பெண்கள் சீதை காட்டிய வழியினின்றும் பிறழப் பிரயத்தனம் செய்தால், அம்முயற்சி வியர்த்தமாவது நிச்சயம்.

நமது நாட்டின் தற்காலத் தேவைகளை அனுசரித்துப் பெண்மக்களில் சிலரும் துறவு இலட்சியங்களை மேற்கொள்ளல் அவசியமெனத் தோன்றுகிறது. அநாதி காலமாகத் தங்கள் இரத்தத்தில் தோன்றியிருக்கும் பதிவிரதா தர்மத்தின் பலத்தினுல், அவர்கள் வலிமை பெற்றுத் தங்கள் வாழ்நாள் முழுதும் கன்னிகைகளாகவே யிருந்து தொண்டாற்ற அவர்களில் சிலராவது விரதங் கொள்ளவேண்டும். தன் புத்திரிகள் சிலராவது இத்தகைய பரிசுத்தமான துறவு மார்க்கத்தை மேற்கொள்ள வேண்டுமெனப் பாரதத் தாய் விரும்புகிறுள். இவர்களில் ஒருவர் ஞானசித்தி பெற்றுலும், அவ்வொருவர் மூலம் ஆயிரக்கணக்கான பெண்கள் மனதில் ஞானச்சுடர் விளக்கு ஏற்றப்பட்டு, அதனுல் தேசத்திற்குப் பெரும் பயனுண்டாகும்.

சிலர் துறவிகளாதல் அவசியம்

ஒழுக்கமும் கல்வியும் வாய்ந்த கன்னிகைகள் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் கடமையை மேற்கொள்ள வேண்டும். கிராமங்கள் தோறும், நகரங்கள் தோறும் பெண்களைப் பயிற்றுவிப்பதற்கெனப் பாட்சாலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இத்தகைய

கல்வி கற்பிக்கும் கடமையை மேற்கொள்ளவேண்டும்

பக்தியும் கல்வியும் வாய்ந்த ஊழியர்களால் தான் பெண்களினிடையே கல்வி பரப்புவது சாத்தியமாகும். தேச சரித்திரம், புராண இதிகாசங்கள், குடும்ப நிர்வாக முறைகள், பலவிதமான கலைகள், குடும்பத்தின்பால் நமக்குள்ள கடமைகள், ஒழுக்கத்திற்கேற்ற கொள்கைகள் — இவை அவர்களுக்குக் கற்பிக்கப் பட வேண்டும். தையல், சமையல், சுகாதாரம், குழந்தைகளைப் பேணல் முதலியனவும் சொல்லித் தரப்பட வேண்டும். தெய்வ ஆராதனை, ஜபம், தியானம் முதலியன, அவர்கள் கல்வி முறையில் முக்கியமான அம்சங்களாக இருக்க வேண்டும். இவற்றுடன் வீர உணர்ச்சியையும் அவர்களிடம் வளர்ப்பது அவசியம். பிறர் வந்து துன்புறுத்தினுல் அவர்களை எதிர்த்துப் போராடத்தக்க வன்மையையும் அவர்கள் பெறவேண்டும்.

தற்காத்தல்

ஜான்சி ராணி தன் சேனைக்குத் தலைமை தாங்கி வீரத்துடன் போர்புரியவில்லையா? சங்கமித்ரா, லீலா, அகல்யாபாய், மீராபாய் போன்ற வீரத்தாய்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தற்காலத்திலும் வீரமும் சக்தியும் வாய்ந்த நாரீமணிகள் இந்நாட்டில் தோன்ற வேண்டும். அவர்கள் வீரத்திற்கு அடிப்படை

யாகத் தூய்மையும் தெய்வபக்தியும் அவர்கள் பால் திகழவேண்டும். குழந்தைகளை நன்ருகப் பேணக்கூடிய சக்தியும் அவர்களுக்கு இன்றி யமையாதது. இத்தகைய தாய்மார்கள் வயிற்றில் பிறக்கும் மக்கள் எதற்கும் அஞ்சா வீரர்களாகவும், மற்ற விதங்களில் சிறந்தவர்களாகவும் இருப்பார்கள் எனச் சொல்லவும் வேண்டுமா?

பெண்கள் உயர்ச்சி பெறவேண்டும். அவர்கள் மூலம்தான் நம் வருங்கால மக்கள் உயர்ந்த கருத்துக்களைப் பெற்று, உயர்ந்த காரியங்களைச் செய்ய முடியும். நமது நாடு சிறப்பெய்த மார்க்கம் இதுவே. இங்ஙனமே நம் நாட்டில் கல்வி, ஞானம், பக்தி, நாகரிகம் சிறப்புற்று வளரும்.

8. அனைவருக்கும் கல்வி

நம் ஏழைகளின் நிலைமையை நினைத்தால் என் மனது வெதும்புகிறது. அவர்கள் ஒவ்வொரு தினமும் கீழ்ச்சென்ற வண்ணமிருக்கிறார்கள். கொடூரமான ஒரு சமுதாயம் அவர்கள் மேல் அடிமேல் அடி சொரிந்துகொண்டேயிருக்கிறது. அவ்வடிகளை அவர்கள் உணருகிறார்கள். ஆனால் அவ்வடிகள் எங்கிருந்து வருபவை என்று அவர்களுக்குத் தெரிவதில்லை. தாங்களும் மனிதர்களே என்பதையும் அவர்கள் மறந்துவிட்டார்கள். இவற்றை நினைத்தால் என் மனத்தில் உணர்ச்சி பொங்குகிறது. இவற்றைப்பற்றிப் பேசவும் எனக்கு நா எழவில்லை. கோடிக் கணக்கான மக்கள் இங்ஙனம் வறுமையிலும், அறியாமையிலும் ஆழ்ந்திருக்கும்போது, அவர்கள் உழைப்பால் வாழ்ந்தும், அவர்களைக் கவனியாதிருக்கும் ஒவ்வொருவனையும் நான் துரோகியென மதிக்கிறேன். பாமர

தேசீயப் பெரும்பாவம்

ஜனங்களை அசட்டை செய்ததே நமது தேசீயப் பெரும்பாவமென்று நான் கருதுகிறேன். நமது வீழ்ச்சிக்கு அது முக்கியமான காரணமாகும். இந்திய மக்கள் அனைவரும் கல்வி பெற்றவர்களாய்ப் பசிப்பிணி யற்றவர்களாகும்வரை, அரசியல் துறையில் நாம் எவ்வளவு பாடுபட்டாலும் அது பயனற்றதாகும்.

வேண்டியது பொதுமக்கள் கல்வியே

ஒரு நாட்டின் முன்னேற்றம், அதன் மக்கள் பெற்றிருக்கும் கல்வி, அறிவு அபிவிருத்தியைப் பொறுத்தது. தேசத்திலிருக்கும் கல்வி, அறிவு அனைத்தும் ஒரு சிறுபான்மையோர் வசம் அகப்பட்டமைதான் இந்தியாவின் வீழ்ச்சிக்குப் பிரதான காரணம். நாம் மறுபடியும் புத்துயிர் பெற்றெழ வேண்டுமானால், கல்வியை அனைவரிடத்திலும் பரப்புவதன்மூலந்தான் அது சாத்தியமாகும். பொதுமக்கள் தங்கள் உயர்ந்த தன்மையை இப்பொழுது மறந்துவிட்டனர். அவர்களுக்குக் கல்வி கொடுத்து, அவர்கள் உயர்ந்த தன்மையை உணரச்செய்வதே நாம் இப்பொழுது செய்யத்தக்க சேவை. உலகத்தின் பலபாகங்களிலும் நடைபெறும் பேரியக்கங்களைப்பற்றி அவர்கள் அறியச் செய்யவேண்டும். இவ்விதம் அறிவைக் கொடுத்தால், தங்

கள் வாழ்க்கைகளைத் திருத்தி அமைத்துக் கொள்ளும் ஆற்றலை அவர்கள் தாங்களே பெறுவார்கள். ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு தேசமும் தன் தன் வாழ்க்கையின் அமைப்பைத் தானே தான் முடிவு செய்து கொள்ளவேண்டும். நாம் அவர்களுக்குக் கொடுக்கவேண்டியது உயர்ந்த கருத்துக்கள் தான். அவர்கள் வேண்டுவதும் அஃதே. அதற்குமேல் அவர்கள் முன்னேற்றம் தானே நேரும். இயற்கை ரசாயனப் பொருள்களை ஒன்று சேர்த்து வைத்தால், இயற்கை விதிப் படி அவை தாமாகவே மாறும். அங்ஙனமே மக்கள் முன்னேற்றத்திற்குரிய சாதனங்கள் அனைத்தையும் ஏற்படுத்தினால், அவர்கள் முன்னேற்றமும் இயற்கை விதிப்படி தானே நிகழும்.

ஆத்மிக வாழ்க்கைக்கு அவசியமான ஞானத்தைப் புகட்டும் மணிமொழிகள் பல நம் சமய நூல்களில் நிறைந்திருக்கின்றன.

அனைவருக்கும் ஆத்மிக ஞானம்

இப்பொழுது அவை சாதாரண மக்கள் கைகளுக்கு எட்டாத இடங்களில் சிலர் வசப்பட்டு இருக்கின்றன. இஞ்ஞான மணிகள் எல்லோருக்கும் பயன்படுமாறு முதலில் செய்யப்பட வேண்டும். சாதாரண மக்கள் அறியவொண்

ஞுத பல ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட சம்ஸ்கிருத பாஷையில் இவை புதைந்திருக்கின்றன. இவ்வரும் கருத்துக்கள் எல்லோருக்கும் கிட்டும்படி செய்யவேண்டும். சம்ஸ்கிருதம் தெரியினும், தெரியாதிருப்பினும், இவை இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு மகன் அல்லது மகளுடைய சொந்த உடைமை யாகவேண்டும். இவை சம்ஸ்கிருத பாஷையிலிருப்பது இவற்றைப் பரப்புவதில் பெருங் கஷ்டமாக விருக்கிறது. நான் என் ஆயுள் முழுதும் இப்பாஷையைப் பயின்றுகொண் டிருக்கிறேன். எனினும், எனக்கே ஒவ்வொரு புத்தகமும் புதிதாகத் தோன்றுகிறதெனில், சாதாரண மக்களுக்கு இதைப் பயிலுவது எவ்வளவு சிரமமாயிருக்கும்! எனவே, அவ்வெண்ணங்கள் பொது ஜனங்களுடைய சொந்த பாஷைகளில் மொழி பெயர்க்கப்படவேண்டும்.

அவரவர்களுடைய சொந்தத் தாய்மொழியில் இவற்றைப் புகட்டுங்கள்! அவர்களுக்கு இவ்வெண்ணங்களைக் கொடுங்கள்! இதன்மூலம் அவர்கள் விஷயங்களை யறிந்து கொள்வார்கள். ஆனால் விஷய ஞானம் மாத்திரம் போதாது. அறிவு, அன்பு, பரஸ்பர விஸ்வாசம் முதலிய

தாய்மொழியில் புகட்டுக!

உயர்ந்த குணங்களையும் அவர்களுக்கு அளியுங்கள்! இவ்வருங் குணங்களின்றி மக்களுடைய அறிவும் உயர்வும் சாஸ்வதமானவையாக இருக்க முடியா.

இத்துடன் சம்ஸ்கிருத பாஷையும் பயிலப்படவேண்டும். சம்ஸ்கிருத ஸ்லோகங்களின் தொனியிலேயே ஒரு கண்ணியமும் சக்தியும் இருக்கின்றன. புத்த பகவான்கூட இவ்விஷயத்தில் ஒரு தவறு செய்தார். சாதாரண மக்கள் சம்ஸ்கிருதம் பயிலும்படி அவர் செய்யவில்லை. அவர், உயர்ந்த கருத்துக்களை அக்காலத்து பாஷையாகிய பாலியில் பரப்பினர். அது மகத்தான காரியம். அதன் மூலம் பெரும் பயன் உண்டாயிற்று. அக்காலத்து மக்களின் சொந்த பாஷையில் அவர் உபதேசம் செய்த காரணத்தால் அவர் அருள் மொழிகள் நாடெங்கும் பரவின. ஆனல், அத்துடன் மக்கள் சம்ஸ்கிருதமும் பயின்றிருக்க வேண்டும். சம்ஸ்கிருதம், அதைப் பயின்றவர்களுக்கு ஒரு தனி மரியாதை அளிக்கிறது. சம்ஸ்கிருதத்தைப் பொது ஜனங்கள் பயிலாதவரை, ஒரு சிலர் மாத்திரம் அதைப் பயின்று உயர்ந்த ஜாதி என்று விளங்க இடமிருக்கிறது.

சமஸ்கிருதப் பயிற்சி

நமது தேசம் குடிசைகளில் வசிக்கிறதென்

பதை நீங்கள் நினைவூட்டிக் கொள்வீர்களாக! ஊர் ஊராக, கிராமம் கிராமமாகச் சென்று, மக்கள் சோம்பி, முயற்சியின்றி இருப்பது இனிமேல் கொஞ்சமும் தகாது என்று அவர்களுக்கு எடுத்துரைப்பது உங்கள் கடமையாகும். நம் தற்கால நிலைமையை அவர்கள் உணரவையுங்கள்! 'சகோதரர்களே! இன்னும் எவ்வளவு காலம் உறங்குவது! எழுங்கள்! விழியுங்கள்!' என்று பரிவுடன் சொல்லி அவர்களைத் தட்டி எழுப்புங்கள்; அவர்கள் நிலைமையை எங்ஙனம் அபிவிருத்தி செய்து கொள்ள முடியுமென எடுத்துரையுங்கள்; நம் சாஸ்திரங்களிலிருக்கும் உயர்ந்த உண்மைகளை எளிமையுடன் சொல்லி, அவர்கள் கிரகிக்கும்படி செய்யுங்கள்; பிராமணர்களைப்போல அவர்களுக்கும் ஆத்மிக வாழ்வு நடத்த உரிமை உண்டு என்பதை அவர்கள் மனதில் ஆழ்ந்து பதிய வையுங்கள்; மிகத் தாழ்ந்தவர்களெனக் கருதப்படுகிறவர்களுக்கும் சர்வ சக்திவாய்ந்த உயர்ந்த மந்திரங்களை உபதேசம் செய்யுங்கள். அத்துடன் வாழ்க்கையின் அவசியங்களைப் பற்றியும், வியாபாரம், விவசாயம் முதலிய தொழில் முறைகளைப் பற்றியும் அவர்களுக்குப் போதியுங்கள்!

தேசம் குடிசைகளில்

நூற்றுக்கணக்கான வருஷங்களாக அரசர்கள் அன்னியர்கள் முதலியவர்களுடைய கொடுமையினாலும், ஜாதிக் கொடுமையினாலும் நம் மக்களின் பலம் மிகவும் குன்றிவிட்டது. மீண்டும் அவர்கள்புத்துயிரும் சக்தியும் பெறுதற்குரிய உபாயம், உபநிடதங்கள் கூறும் உயர்ந்த உண்மைகளை அறிந்து, 'தான் என்றுமழியா, சர்வ வல்லமையுள்ள ஆத்மா' என்று ஒவ்வொருவரும் நம்புவதேயாகும். 'என்னைக் கத்தி வெட்டாது, நெருப்பு எரிக்காது, காற்று உலர்த்தாது; நான் சர்வ வல்லமையுள்ளவன், சர்வஞ்ஞன் என்ற இந்த எண்ணங்களில் அவர்கள் உறுதி கொள்ளவேண்டும். இவ் வுயர்ந்த கருத்துக்கள் இப்பொழுது அடைத்து வைக்கப் பட்டிருக்கும் குகைகளிலிருந்தும் காடுகளிலிருந்தும் வெளிப்போந்து, பொதுமக்கள் மனதில் குடி கொண்டு; தினசரி வாழ்க்கையில் அனுஷ்டிக்கப்பட வேண்டும். இவ் வெண்ணங்கள் கோர்ட்டுகளிலும், கோவில்களிலும் ஏழைமக்கள் வசிக்கும் குடிசைகளிலும், மீன் பிடிக்கும் செம்படவர் இடங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் — எல்லா இடங்களிலும் நுழைந்து வேலை செய்யவேண்டும். சீரிய இந்

தினசரி வாழ்க்கையில் ஆத்மிக உணர்ச்சி

நினைவுகள் ஆண் பெண் குழந்தை முதலிய அனைவரையும் முன்னேறும்படி அறைகூவி அழைக்கின்றன. செம்படவர்கள் முதலியோர் எவ்விதம் இக்கருத்துக்களை மேற்கொண் டொழுக முடியுமென நீங்கள் கேட்கலாம். இதற்கு வழி முன்னமேயே காண்பிக்கப்பட் டிருக்கிறது. ஒரு செம்படவன் தான் உடம் பன்று, ஆத்மாவென்று நினைப்பதன் மூலம் அவன் தன் தொழிலில் இன்னும் அதிக திறமையுடையவனாவான். அவ்விதமே பள்ளிப் பிள்ளைகள் தாங்கள் ஆத்மாவென்று நினைப் பதன்மூலம் இன்னும் அதிக ஆற்றலைப் பெறு வார்கள்.

பள்ளிகள் ஏழைகளிடம் செல்லவேண்டும்

இந்தியாவிலுள்ள எல்லாக் கெடுதல்களுக் கும் அடிப்படையாயிருப்பது நம் மக்களின் வறுமையேயாகும். ஓர் கிராமத்தில் ஒரு இல வசப் பள்ளிக்கூடம் வைக்கி றீர்கள் என்று வைத்துக்கொள் ளுவோம். அஃது இலவசமாக இருந்தாலும் யாதொரு நன் மையும் செய்யாமல் போகலாம். ஏனெனில், வறுமையின் காரணமாகப் பிள்ளைகள், படிப் பதைவிடக் கொஞ்சம் உழைத்துத் தாய் தந்தையருக்கு உதவ விரும்புவார்கள். 'மலை முகம்மதுவிடம் செல்லாவிட்டால், முகம்மது

தான் மலையிடம் செல்லவேண்டும்' என்ற பழமொழி ஒன்றுண்டு. அதைப்போல அவ்வேழைப் பிள்ளைகள் பள்ளிகளுக்குப் போகாவிட்டால், பள்ளிகள்தான் அவர்களிடம் செல்லவேண்டும். சேவையே இலட்சியமாகக் கொண்ட ஆயிரக்கணக்கான சாதுக்கள் நம் நாட்டில் கிராமம் கிராமமாய்ச்சென்று சமய போதனை செய்து கொண்டிருக்கிறார்கள். இலௌகிக விஷயங்களைப் பற்றியும் சொல்லிக் கொடுக்க அவர்களை ஏற்பாடு செய்ய முடியுமானால், அவர்கள் கிராமந்தோறும் வீடு வீடாகச் சென்று சமய போதனையுடன் இலௌகிகக் கல்வியும் கொடுத்துக்கொண்டு செல்வார்கள். இப்படி இருண்டுபோன ஒரு காமிரா, (போட்டோப் பிடிக்கும் கருவி) ஓர் உலகப் படம் முதலியவற்றுடன் மாலைகளில் கிராமங்களுக்குச் செல்வார்களானால், வான நூல், பூகோளம், முதலியவற்றைக் கிராம மக்களுக்கு எளிதாகச் சொல்லித்தர முடியும். பல தேசங்களைப் பற்றிக் கதைகள் சொல்வதன் மூலம் அவர்கள் தங்கள் வாழ்க்கை முழுதும் படிக்கக்கூடிய விஷயங்களைக் காட்டிலும் அதிகமாகக் கேள்வி மூலம் புகட்டலாம். புதிய விஞ்ஞான சாஸ்திரத்தின் மூலம் அவர்கள் மனதில் கல்வியில் ஆர்வத்தை ஊட்டுங்கள்! சரித்திரம், பூமி வர்

ணே, விஞ்ஞானம், இலக்கியம், ஆகியவற்றில் கல்வியளியுங்கள்! இவற்றுடன் சேர்ந்து சமய நீதிகளேயும் அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

ஜீவனேபாயம் தேடும் முயற்சியிலேயே நம் ஏழை மக்களின் காலம் முழுதும் கழிந்து விட்டது. கல்வி யறிவுகளில் மனதைச் செலுத்த அவர்களுக்கு இதுவரை அவகாசம் கிடைக்கவில்லே. அவர்கள் அறிவற்ற யந்திரங்கள்போல வேலே செய்து வந்திருக்கின்றனர். ஆனல் இப்பொழுது காலம் மாறி விட்டது. மேல் வகுப்பார் பாமர ஜனங்களே இனிமேல் அடக்கி ஆளமுடியாது. தங்கள் க்ஷேமத்தில் அக்கரையுள்ளவர்களா யிருந்தால், தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குரிய உரிமைகளே அவர்களுக்கு உயர்ந்த ஜாதியார் உடனே அளிக்க வேண்டும். ஆதலால், மேல் வகுப்பினராகிய உங்களுக்குச் சொல்லுகிறேன்; பாமர மக்களிடம் கல்வி பரப்பும் சேவையை நீங்கள் மேற்கொள்ளுங்கள்! 'நீங்கள் எங்கள் சகோதரர்கள். எங்கள் உடம்பில் ஒரு பகுதியா யிருப்பவர்கள்' என்று சொல்லி இவ்வொற்றுமை யுணர்ச்சி அவர்கள் மனதில் பதியும்படி செய்யுங்கள். இவ்விதம் அவர்களே அன்புடன் நடத்தினல், அவர்கள் இதன் மூலம்

பேருக்கம் எய்திப் பன்மடங்கு சக்தியுடன் முன்னேற்ற மடைவார்கள்.

ஏதேனும் பெரிய காரிய மொன்றை நிறைவேற்றவேண்டுமானால் அதற்கு மூன்றுவிஷயங்கள் மிகவும் அவசியமானவை.

செயற்கரிய செய்ய வேண்டுவன: உணர்ச்சி

முதல் முதல், இதயபூர்வமான உணர்ச்சிவேண்டும். விவேகத்தினாலும், புத்திசாலித்தனத்தினாலும் ஆவதென்ன? அவை சிறிது தூரம் சென்று, அங்கே நின்று விடுகின்றன. அருள் சுரப்பது, ஆர்வமுண்டாவது, இதயத்தின் மூலந்தான். முடித்தற்கரிய காரியங்களை முடிக்கவல்லது அன்புதான். பிரபஞ்சத்திலுள்ள இரகசியங்களை யெல்லாம் அறிவதற்கு வாயிலாகவிருப்பதும் இவ்வன்புதான். தேசாபிமானிகளாக இருக்க விரும்பும் என் சிநேகிதர்காள்! இத்தகைய உணர்ச்சியை நீங்கள் முதலில் பெறுங்கள். உங்களிடம் உண்மையில் இவ்வுணர்ச்சி யிருக்கின்றதா? தேவர்கள், ரிஷிகளுடைய சந்ததியாரான கோடானுகோடி ஜனங்கள் இன்று மிருகங்களுக்குச் சமதையாக, அவற்றின் சகோதரர்போன்ற நிலைக்கு வந்துவிட்டனரே என்ற உணர்ச்சி உங்களுக் கிருக்கிறதா? இலட்சக் கணக்கான ஜனங்கள் இன்றைய தினம் உணவின்றிப்

பட்டினியாகக் கிடக்கின்றார்களே! இலட்சக் கணக்கான ஜனங்கள் பல நூற்றாண்டுகளாய் இப்பட்டினியில் மடிந்து வருகின்றார்களே என்ற உணர்ச்சி உங்களுக்கு இருக்கிறதா? அஞ்ஞானமானது இருண்ட மேகம்போல் சூழ்ந்து நாட்டைக் கவிந்துகொண்டு விட்டதே என்பதை நீங்கள் உணருகிறீர்களா? அவ்வுணர்ச்சி உங்களை அமைதியற்றவர்களாக்கி விட்டதா? உங்களை நித்திரையற்றவர்களாகச் செய்கின்றதா? அஃது உங்கள் இரத்தத்திற்குள் பிரவேசித்து, இரத்தக் குழாய்களின் வழியே சுற்றி, உங்கள் இதயத்துடன் சேர்ந்து ஓயாமல் துடித்துக் கொண்டிருக்கிறதா? அஃது உங்களை அநேகமாய்ப் பித்தர்களாக்கி விட்டதா? நாட்டின் துக்கம், சீர்கேடு என்ற ஒரே கவலை உங்களைப் பிடித்துக்கொண்டு விட்டதா? அதனால் உங்கள் பெயர், புகழ், பெண்டு பிள்ளைகள், சொத்து சுதந்தரங்கள் எல்லாவற்றையும் மறந்தீர்களா? உங்கள் தேகத்தையும்கூட மறந்து விட்டீர்களா? இந்த நிலைக்கு வந்து விட்டீர்களானால் அதுவே தேசாபிமானியாவதற்கு முதற்படியாகும்.

இவ்வுணர்ச்சி உங்களிடம் இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும், வெறும் வசை மொழிகளிலும் உபயோகமற்ற பேச்சுக்களி

லுமே உங்கள் சக்தியையெல்லாம் செலவிடாது, ஏதாவது காரியத்திற் கொணரும் வழி யொன்றைக் கண்டு பிடித்தீர்களா? வீணான தூஷணைகளை விட்டுவிட்டு, ஜனங்கள் படுந்துன்பங்களைச் சிறிதேனும் தணிக்க உபயோகமான காரியம் ஏதேனும் செய்யவும், நடைப்பிணங்களாகிக் கிடக்கும் அவர்களை அக்கேவல நிலையிலிருந்து விடுவிக்கவும் ஏதாவதொரு மார்க்கத்தைக் கண்டுபிடித்தீர்களா? இவற்றைச் செய்தால் மாத்திரம் போதாது.

வழி காணல்

உங்கள் காரியத்தில் இடையூறுகள் மலைபோலத் திரண்டு வரினும், அவற்றைத் தயங்காது எதிர்த்துக் கொல்லும் திடமான மனோ சங்கற்பம் உங்களிடம் இருக்கிறதா? முழு உலகமும் சேர்ந்து கையிற் கத்திகொண்டு எதிர்த்து நின்றாலும், நீங்கள் சரியென்று நினைக்கும் காரியத்தைச் சற்றும் பின் வாங்காது செய்யவல்ல தைரியம் உங்களிடம் இருக்கிறதா? உங்கள் பெண்டு பிள்ளைகளே உங்களுக்கு விரோதமாக நிற்பினும், உங்கள் பணமெல்லாம் இழக்க நேரிடினும், அதனால் உங்கள் பெயரே கெடுவதானாலும், மற்றெல்லாச் செல்வங்களும் போய் விடுவதாக இருந்

திட சங்கற்பம்

தாலும்கூட, அப்பொழுதும் எடுத்த காரியத்தை விடாமல் உறுதியாக நிற்பீர்களா? சகலமும் துறக்க நேரிடும் அக்காலத்திலும், நீங்கள் கருதிய உங்கள் இலட்சியம் கைகூடும் வரை, இடைவிடாமல் உறுதியாக மேல்நோக்கிச் செல்வீர்களா? பர்த்ருஹரியார் சொல்வதுபோல் 'ஞானிகளானோர் நிந்திப்பதானாலும் நிந்திக்கட்டும் அல்லது புகழ்வதானாலும் புகழட்டும்; சகல பாக்கியங்களையும் கொடுக்கும் இலக்ஷ்மி வந்தாலும் வரட்டும்; அல்லது தனக்கிஷ்டமான இடத்திற்குப் போனாலும் போகட்டும்; மரணமானது இன்றே வந்தாலும் சரி அல்லது நூறு வருஷங்கள் கழித்து வந்தாலும் சரி; எவனொருவன் உண்மையினின்றும் மயிரிழையேனும் பிறழாதிருப்பானோ அவனே உறுதியுடையோனாவான்.' இவ்வுறுதி உங்களிடம் இருக்கின்றதா? இந்த மூன்று விஷயங்களும் —உண்மையுணர்ச்சி, தக்க வழியொன்று காணல்; கண்ட அவ்வழியில் உறுதியுடன் உழைத்தல் — உங்களிடம் இருக்குமானால், நீங்கள் ஒவ்வொருவரும் அற்புதங்களைச் செய்வீர்கள்.

கருணைப்பேரொளி நமக்கு வழிகாட்டட்டும் என்று நாம் பிரார்த்திப்போமாக! அப்பொழுது நம்மைச் சுற்றியிருக்கும் அந்த

காரத்தினூடே ஓர் அருள் ஒளி தென்படும். நமக்கு வழிகாட்ட ஒரு திருக்கரம் வெளித் தோன்றும். வறுமையினாலும், வைதிகத்தின் கொடுமையினாலும், கொடுங்கோன்மையாலும் நசுக்கப்பட்ட நம் நாட்டிலிருக்கும் இலட்சக்கணக்கான மக்களுக்காக நாம் ஒவ்வொருவரும், இரவும் பகலும் பிரார்த்தனை செய்வோமாக! செல்வவந்தரைவிட நான் இவர்களுக்கே மத உபதேசம் செய்ய விரும்புகிறேன். நான் தத்துவ சாஸ்திரியல்லன்; ஞானியுமல்லன்; ஆனால், நான் ஒரு ஏழை; ஏழைமக்களை நேசிக்கிறேன். தரித்திரத்திலும் அறியாமையிலும் ஆழ்ந்திருக்கும் கோடிக்கணக்கான மக்களுக்காக யார் இரங்குகிறார்கள்? யாரொருவர் ஏழை மக்களின் பொருட்டு நெஞ்சு புண்ணாக வருந்துகிறாரோ அவரை ஒரு மகாத்மாவென மதிப்பேன். ஆனால் அவர்களுக்காக யாரே வருந்துகிறார்கள்! அவர்கள் ஞானத்தையோ, கல்வியையோ பெறமுடியாது. அவர்களுக்கு வெளிச்சத்தைக் கொண்டு வருவார் யார்? வீடுவீடாகச் சென்று அவர்களுக்குக் கல்வி புகட்ட முற்படுவோர் யார்? இவ்வேழை மக்களையே உங்கள் தெய்வமாகக் கொள்ளுங்கள்; அவர்களைப்பற்றியே சிந்தனை

தொண்டே
தெய்வ வழிபாடு

செய்யுங்கள்; அவர்களுக்காகவே உழையுங்கள்; அவர்களுக்காகவே சதா பிரார்த்தனை செய்யுங்கள்! ஈஸ்வரன் உங்களுக்கு வழி காட்டுவாஞக!

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்

கோயமுத்தூர் ஜில்லா

7-12-'41

தமிழ் மக்களுக்கு,

தமிழ்ப் பணியே தாய்ப் பணி. பிற மொழிகளில், பல கலைகளிலும் அரும் பெரும் நூல்கள் நிறைய வெளிவருகின்றன. தமிழில் மட்டும் அவ்வாறில்லை. இது நமக்குப் பெருமை யன்று.

வித்யாலயம் இதுவரை கல்வி யுலகில் குரு குலமாகச் சேவை செய்து வந்திருக்கிறது. இப்பொழுது புத்தக உலகிலும் சேவை செய்ய முன் வருகிறது. வித்யாலயம் ஈடுபட்டிருக்கும் முயற்சிகளில், உங்கள் அனைவரின் அன்பை யும் ஆதரவையும் வேண்டுகிறோம்.

தங்கள் அன்புள்ள,

தி. சு. அவினாசிலிங்கம்

நா. ம. ரா. சுப்பராமன்

காரியதரிசிகள்